தினபூமி
thinaboomi.com
கோவை, வெள்ளி, செப்டம்பர் 30, 2022 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00

உலகம்
**வடகொரியாவின் ஏவுகணை சோதனை நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது: கமலா ஹாரிஸ் குற்றச்சாட்டு**

பக்கம் 2

இந்தியா
**காங்கிரஸ் தலைவர் தேர்தலில் அசோக் கெலாட் போட்டியில்லை: சசிதரூர் - திக்விஜய்சிங் போட்டி**

பக்கம் 3

விளையாட்டு
**முதுகு பகுதியில் காயம்: டி-20 உலக கோப்பையில் இருந்து பும்ரா விலகல்**

பக்கம் 7


● மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்று வரும் நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு அம்மன் தட்சிணாமூர்த்தி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

ரூ.174.48 கோடியில் செம்மஞ்சேரி, வேளச்சேரியில்

# மழைநீர் வடிகால் பணிகளை நேரில் ஆய்வு செய்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, செப். 30-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று நீர்வளத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் செம்மஞ்சேரி, நூக்கம்பாளையம், பெரும்பாக்கம், வேளச்சேரி, பள்ளிக்கரணை, அடையாறு ஆகிய இடங்களில் 174.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வெள்ளத் தடுப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேரடியாக சென்று ஆய்வு செய்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்தி, போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்றன. வரும் பருவமழை காலங்களில் மழைவெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டு தற்போது அப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் செம்மஞ்சேரி, நூக்கம்பாளையம், பெரும்பாக்கம், வேளச்சேரி, பள்ளிக்கரணை, அடையாறு ஆகிய இடங்களில் ரூ.174.48 கோடி மதிப்பீட்டிலான வெள்ளத் தடுப்புப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் இப்பணிகள் அனைத்தையும் அக்டோபர் மாதத்திற்குள் விரைவாகவும், தரமாகவும் முடித்திட வேண்டும் என்று தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு முதல்வர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, பொன்முடி, தா.மோ. அன்பரசன், மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பாலாஜி, அரவிந்த் ரமேஷ் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் அபாயம்:

# தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்., வி.சி.க. பேரணிகளுக்கு அனுமதி இல்லை

## தமிழக காவல்துறை அறிவிப்பு

சென்னை, செப். 30-

சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளின் காரணமாக அக்டோபர் 2-ம் தேதி அனுமதி கோரப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ். ஊர்வலம், வி.சி.க. மனித சங்கிலிப் போராட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்து காவல்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் அக்டோபர் 2-ம் தேதி அணிவகுப்பு ஊர்வலம் நடத்த அனுமதி கோரி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அணிவகுப்பு ஊர்வலத்திற்கு விதிகளுக்குட்பட்டு நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்டிருந்தார்.

**வி.சி.க. மனுதாக்கல்...**

இந்நிலையில், வி.சி.க. தலைவர் திருமாவளவன் சார்பில், காவல் ஆணையர் அலுவலகத்தில், அக்டோபர் 2-ம் தேதி சமூக நல்லிணக்க மனித சங்கிலி போராட்டம் நடத்த காவல்துறையிடம் மனு அளித்திருந்தார். மேலும், ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கி உயர் நீதிமன்ற தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவை திரும்ப பெறக் கோரி மனுதாக்கல் செய்திருந்தார்.

**வேண்டுகோள்...**

இந்நிலையில், வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து ஒருங்கிணைக்கும் சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும்படி திருமாவளவன் அனைத்து அரசியல் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த கோரிக்கையை ஏற்று, பல்வேறு அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்கெடுக்கப் போவதாக அறிவிப்பு வெளியிட்டிருந்தன.

**சுப்ரீம் கோர்ட்டில்...**

ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்துக்கு அனுமதியளித்து பிறப்பித்த உத்தரவை எதிர்த்து திருமாவளவன் தொடர்ந்த வழக்கை விசாரிக்க மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட்டில் தான் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தது.

**பல அமைப்புகள்...**

இந்தநிலையில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாக தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்., வி.சி.க. பேரணிகளுக்கு அனுமதி மறுக்கப்படுவதாக தமிழக காவல்துறை தெரிவித்துள்ளது. "பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பு தடை செய்யப்பட்ட சூழலில், இதனை எதிர்த்து இஸ்லாமிய அமைப்புகள் கண்டன போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றனர். மாநிலத்தில் மத உணர்வுகளைத் தூண்டும் பல்வேறு நிகழ்வுகள், சமீபத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. அதேபோல், சமூக நல்லிணக்க மனித சங்கிலிப் போராட்டம் என்ற பெயரில் வி.சி.க., இடதுசாரிகள் உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட அமைப்புகளும் அனுமதி கோரியுள்ளனர்.

**அனுமதி மறுப்பு...**

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க காவல்துறையினர் இரவு பகல் பாராமல், பாதுகாப்பு பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். எனவே சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளின் காரணமாக அக்டோபர் 2-ம் தேதியன்று அனுமதி கோரப்பட்டுள்ள ஆர்.எஸ்.எஸ். ஊர்வலம் மற்றும் வி.சி.க. மனித சங்கிலி போராட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது" என்று தமிழக காவல் துறை உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு தனி நீதிபதி

# அனுமதி வழங்கிய உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும்

## காவல்துறை சார்பில் ஐகோர்ட்டில் சீராய்வு மனு தாக்கல்

சென்னை, செப். 30-

ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதியளித்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி தமிழக காவல் துறை தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**நிபந்தனைகளுடன்...**

ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்து அனுமதி வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 22-ம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவைத் தொடர்ந்து, ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் காவல் துறை தரப்பில் சீராய்வு மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**நல்லிணக்க பேரணி...**

அந்த மனுவில், "தற்போதைய சட்டம் - ஒழுங்கு சூழலில் மத்திய அரசால் பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பு தடை செய்யப்பட்ட நிலையில், அதற்கு எதிராக இஸ்லாமிய அமைப்புகள் கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி வருகின்றன. மாநிலத்தில் மத உணர்வுகளைத் தூண்டும் பல்வேறு நிகழ்வுகள் சமீபத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில் ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ள அன்று சமய நல்லிணக்க பேரணி என்ற பெயரில் சில அமைப்புகள் ஊர்வலம் மனித சங்கிலி போன்றவற்றை நடத்த அனுமதி கோரியுள்ளது.

**மறு ஆய்வு செய்ய..**

மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கை காக்க கண்காணிக்க காவல் துறையினர் முழு வீச்சில் இரவு பகலாக அனைத்து இடங்களிலும் ரோந்து உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழலில், ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட எந்த அமைப்புகளின் ஊர்வலம் மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி அளிக்க இயலாது என தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கி பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்று மனுவில் கோரப்பட்டிருந்தது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 2023 முதல் பயணிகள் கார்களில் 6 ஏர்பேக்குகள் கட்டாயம்: மத்திய அரசு

புதுடெல்லி, செப். 30-

2023 முதல் பயணிகள் கார்களில் ஆறு ஏர்பேக்குகள் கட்டாயம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் புதிய மாடல் கார்கள் அனைத்திலும் இனி கட்டாயம் ஏர்பேக் பொருத்த வேண்டும் என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை உத்தரவிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த ஜூலை 2019 முதல், அனைத்து புதிய கார்களிலும் டிரைவர் பகுதியில் ஏர்பேக் கட்டாயமாக்கப்பட்டது.

அதே நேரத்தில் இந்த ஆண்டு ஜனவரி முதல், முன் இருக்கையில் அமர்ந்திருக்கும் மற்றொரு நபருக்கும் ஏர்பேக் கட்டாயமாக்கப்பட்டது.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையின் படி ஏப்ரல் 1, 2021 முதல் அறிமுகம் செய்யப்படும் புதிய மாடல் கார்கள் அனைத்திலும் டூயல் ஏர்பேக் அதாவது காரை இயக்குபவருக்கும், முன் இருக்கையில் அமர்ந்திருக்கும் மற்றொரு நபருக்கும் கட்டாயம் ஏர்பேக் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என அறிவித்திருந்தது.

இதனை தொடர்ந்து, எட்டு பேர் அமர்ந்து பயணிக்கக்கூடிய பெரிய ரக கார்களில், 6 ஏர்பேக்குகளை கட்டாயமாக்க அரசு திட்டமிட்டிருந்தது.

8 பேர் வரை செல்லும் மோட்டார் வாகனங்களில் பயணம் செய்வோரின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், குறைந்தபட்சம் 6 ஏர்பேக்குகளை கட்டாயமாக்குவதற்கான வரைவு பொது சட்ட விதிகள் அறிவிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், மத்திய சாலை போக்குவரத்து துறை மற்றும் நெடுஞ்சாலை துறை மந்திரி நிதின் கட்காரி நேற்று கூறியிருப்பதாவது,

"மோட்டார் வாகனங்களில் பயணிக்கும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பு முதன்மையான முன்னுரிமையாகும்.

(கடைசி பக்கம் பார்க்க)

# வைர வர்த்தக மையமாக சூரத் நகரம் உருவெடுக்கும்

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

சூரத், செப். 30-

டிரீம் சிட்டி திட்டம் முடிந்ததும் சூரத் நகரம் வைர வர்த்தக மையமாக உருவெடுக்கும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று குஜராத் சென்றார். சூரத் விமான நிலையத்தில் மோடியை குஜராத் முதலமைச்சர் பூபேந்திர பட்டேல் வரவேற்றார். பின்னர் மோடி, சூரத்தில் ரோடுஷோ நடத்தினார். கோதாதர பகுதியில் இருந்து லிம்பயத் வரை காரில் இருந்தபடி சாலையின் இரு புறமும் திரண்டிருந்த மக்களுக்கு கையசைத்து சென்றார். அப்போது மோடியை மக்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

இதையடுத்து, குஜராத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவடைந்த பல திட்டங்களை தொடக்கிவைத்த பின்னர் நடைபெற்ற பேரணியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர், கடந்த 20 ஆண்டுகளில் சூரத் அபரிமிதமாக முன்னேறியுள்ளது என்றார். மேலும் அவர் பேசியதாவது:-



வைர ஆராய்ச்சி மற்றும் வணிக (டிரீம்) நகரத் திட்டம் முடிந்ததும், சூரத் உலகின் பாதுகாப்பான மற்றும் வசதியான வைர வர்த்தக மையமாக உருவெடுக்கும். நான் குஜராத் முதல்வராக இருந்தபோது, இங்கு விமான நிலையத்தின் அவசியத்தை அப்போதைய மத்திய அரசிடம் விளக்கி அலுத்துவிட்டோம். இப்போது, இங்குள்ள விமான நிலையத்திலிருந்து பலர் வந்து செல்வது நகரத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது. இது இரட்டை இயந்திர அரசாங்கத்தின் பலன்.

சூரத்தின் வைரம் மற்றும் ஜவுளித் தொழிலை நம்பி பல குடும்பங்கள் உள்ளன. டிரீம் சிட்டி திட்டம் நிறைவடைந்தவுடன் உலகின் பாதுகாப்பான மற்றும் வசதியான வைர வர்த்தக மையமாக சூரத் உருவெடுக்கும். நாட்டில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நான்கு கோடிக்கும் அதிகமான மக்கள் இலவச மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 32 லட்சம் பேர் குஜராத்தைச் சேர்ந்தவர்கள். இதில் சூரத்தில் இருந்து 1.25 லட்சம் பேர் உள்ளனர். இவ்வாறு அவர் பேசினார்.

இதையடுத்து, நேற்று இரவு அகமதாபாத்தில் 36-வது தேசிய விளையாட்டு போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். பின்னர் நவராத்திரி விழாவில் கலந்து கொண்டார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் / டீசல் |
|---|---|---|---|---|---|
| -188.32 பாயின்ட் 56409.96 | -40.50 பாயின்ட் 16818.1 | 1 சவரன் ₹37,440 / 1 கிராம் ₹4,680 | 1 கிலோ ₹61,500 / 1 கிராம் ₹61.50 | ₹81.79 | பெட்ரோல் ₹102.63 / டீசல் ₹94.24 |

# வடகொரியாவின் ஏவுகணை சோதனை நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது

## கமலா ஹாரிஸ் குற்றச்சாட்டு



**சியோல், செப். 30-**

வடகொரியாவின் ஏவுகணை சோதனை நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது என்று அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள தயாராகும் வகையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கடற்படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கடந்த 25-ம் தேதி குறுகிய தூரம் செல்லக் கூடிய பாலிஸ்டிக் ஏவுகணையை வடகொரியா சோதித்தது. இந்த பரபரப்பு அடங்குவதற்குள் வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியது.

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். தென் கொரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள கமலா ஹாரிஸ் நேற்று அதிகாலை சியோல் சென்றடைந்தார். அதை தொடர்ந்து அவர் நேற்று வடகொரியா மற்றும் தென்கொரியா நாடுகளை பிரிக்கும் எல்லை பகுதிகளை பார்வையிட்டார். அதன்பின், வடகொரியாவின் ஏவுகணை சோதனை குறித்து தென் கொரிய அதிபர் யூன் சுக்-யோல் உடன் கமலா ஹாரிஸ் ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறுகையில்,

வடகொரியாவின் ஏவுகணை சோதனை நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது என்றார். வடகொரியா முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு ஏவுகணை சோதனையை தீவிரப் படுத்தியுள்ளது. இந்த ஆண்டு தொடங்கியதில் இருந்து இப்போது வரை 30-க்கும் அதிகமான ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அண்ணா பல்கலை. செமஸ்டர் தேர்வு முடிவுகள் வெளியீடு

**சென்னை, செப். 30-**

அண்ணா பல்கலைக்கழகத்தில் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளுக்கான ஏப்ரல், மே மாத செமஸ்டர் தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகி உள்ளன. மாணவர்கள் *https://aucoe.annauniv.edu/* என்ற இணைப்பை கிளிக் செய்து, தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த பல்கலைக் கழகங்களில் ஒன்று அண்ணா பல்கலைக் கழகம். பொறியியல் படிப்பிற்கு முக்கியமான பல்கலைக் கழகங்களில் அண்ணா பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக் கழகத்திற்கு கீழ் வரும் கல்லூரிகளில் பல லட்சம் மாணவர்கள் பொறியியல் படிப்புகளை படித்து வருகின்றனர்.

கொரோனா பெருந்தொற்றுகளால் கடந்த ஆண்டுகளாக பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டு, ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடந்து வந்தன. நிலைமை ஓரளவுக்குக் கட்டுக்குள் வந்த பிறகு கடந்த சில மாதங்களாகக் கல்லூரிகள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் பொறியியல் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கு கடந்த ஏப்ரல், மே மாதத்தில் செமஸ்டர் தேர்வுகள் நடைபெற்றன. அதற்கான தேர்வு முடிவுகளை அண்ணா பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. மாணவர்கள் *https://aucoe.annauniv.edu/* என்ற இணைப்பை கிளிக் செய்து, தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளலாம். அதே போல பிஎச்.டி. படிப்புகளுக்கான 2021 நவம்பர், டிசம்பர் மாத செமஸ்டர் தேர்வு முடிவுகளையும் நேற்று அண்ணா பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

# இளைஞர்களின் ஆற்றலை மேம்படுத்த 2 ஆண்டு கால புத்தாய்வு திட்டம் துவக்கம்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, செப். 30-**

முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சார்பில், சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள 30 இளம் வல்லுநர்களுக்கு, 30 நாட்கள் வகுப்பறை பயிற்சியுடன் கூடிய இரண்டாண்டு புத்தாய்வுத் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு தனது அனைத்துத் துறைகளிலும் சிறந்த நல்லாட்சியை வழங்கிட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு இரண்டாண்டு கால தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. திறன் மிகு இளைஞர்களின் ஆற்றலையும், திறமையையும் பயன்படுத்தி, நிர்வாகச் செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழகத்தில் உள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் சேவை வழங்கலை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக தேர்வு நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 30 இளம் வல்லுநர்களுக்கு, அரசின் உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு 30 நாட்கள் வகுப்பறை பயிற்சி பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து சென்னையிலுள்ள அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் வழங்கப்படும்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் இளம் வல்லுநர்களுக்கு முதல்வர் மடிக்கணினிகளை வழங்கி, தமிழக அரசு மேற்கொண்டு வரும் முன்முயற்சிகளிலும், நல்லாட்சி வழங்குவதிலும் இளம் வல்லுநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பை சிறப்பான முறையில் பயன்படுத்தி முழுமையான அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இப்புத்தாய்வுத் திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் கலந்து கொள்ளும் இளம் வல்லுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ. 65,000/- மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கான பயணச் செலவு, கைப்பேசி மற்றும் தரவு பயன்பாடு போன்ற செலவினத்திற்காக மாதம் ரூ.10,000/- கூடுதல் தொகையாக வழங்கப்படும்.

இரண்டு வருட புத்தாய்வுத் திட்டத்தை திருப்திகரமாக நிறைவு செய்யும் வல்லுநர்களுக்கு, பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் பொதுக்கொள்கை மற்றும் மேலாண்மையில் முதுகலை சான்றிதழ் வழங்கும்.

இதுதவிர, ஏற்கனவே முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு குறைந்தபட்ச தகுதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் மூலம் முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு வாய்ப்பும் வழங்கப்படும்.

# புளோரிடாவை தாக்கிய இயன் சூறாவளி: காற்றின் வேகத்தில் சிக்கிய செய்தியாளர்

**புளோரிடா, செப். 30-**

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் புதன்கிழமை அன்று இயன் என்ற சூறாவளி கரையைக் கடந்தது. அப்போது மோசமான சேதம் அங்கு ஏற்பட்டுள்ளது. இந்த சூறாவளியால் சுறாக்கள் சில கடலில் இருந்து வீதிகளுக்கு அடித்து வரப்பட்டுள்ளன. இந்த பாதிப்பை தொகுத்து செய்தியாக வழங்கிக் கொண்டிருந்த செய்தியாளர் ஒருவர் காற்றின் வேகத்தில் சிக்கி சிறிது தூரம் அடித்துச் செல்லப்பட்டார்.

இந்த சூறாவளி அமெரிக்காவை தாக்கிய மிகவும் மோசமான சூறாவளிகளில் ஒன்று என சொல்லப்படுகிறது. இந்த சூறாவளி கரையை கடந்தபோது பதிவான மழை மற்றும் காற்றின் வேகத்தை பிரதிபலிக்கும் வகையில் இணையவெளியில் சில வீடியோ காட்சிகள் வலம் வருகின்றன. இந்தச் சூறாவளி தரையை கடந்த போது மணிக்கு 241 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசி உள்ளது. சுமார் 18 லட்சம் மக்கள் மின்சார வசதியின்றி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் கியூபாவிலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. அங்கு 2 பேர் இதனால் உயிரிழந்துள்ளனர். சுமார் ஒரு கோடியே 10 லட்சம் மக்கள் மின்சார வசதி பாதிப்பால் அவதியுற்றுள்ளனர்.

புளோரிடாவே வெள்ளக் காடாக மாறியுள்ளது. அதனால் மருத்துவக் குழு மற்றும் 300 ஆம்பூலன்சுகளை அமெரிக்க அரசு அனுப்பியுள்ளது. மக்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கவும் ஏற்பாடுகள் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புளோரிடா மக்களுக்கு துணையாக தங்கள் அரசு இருக்கும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# தென்காசி மாவட்டம் அடவிநயினார்கோவில் மற்றும் கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து இன்று முதல் நீர் திறக்க உத்தரவு

**சென்னை, செப். 30-**

தென்காசி மாவட்டம் அடவிநயினார்கோவில் மற்றும் கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்தினை கருத்தில் கொண்டு, அடவிநயினார்கோவில் பாசனம் - மேட்டுக்கால், கரிசல்கால், பண்பொழிகால், வல்லாக்குளம்கால், இலத்தூர்கால், நயினாரகரம்கால், கிளங்காடுகால், கம்பளிக்கால், புங்கன் கால், சாம்பவர் வடகரை கால்வாய் மற்றும் இரட்டைகுளம் கால்வாய் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களுக்கு 1432-ம் பசலி பிசான சாகுபடி செய்வதற்கு அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத்திலிருந்து இன்று 30.09.2022 முதல் 26.02.2023 வரை 150 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 100 க.அடி அளவுக்கு மிகாமல் பாசனபருவகாலத்தின் மொத்த தேவையான தண்ணீர் அளவான 955.39 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தென்காசி மாவட்டம், செங்கோட்டை, தென்காசி மற்றும் கடையநல்லூர் ஆகிய வட்டங்களில் 7643.15 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

அவர் விடுத்துள்ள மற்றொரு செய்திக்குறிப்பில்,

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம், கருப்பாநதி பாசனம் - பெருங்கால், பாப்பான்கால், சீவலன்கால், இடைக்கால், கிளங்காடுகால் மற்றும் ஊர்மேலழகியான்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களுக்கு 1432-ம் பசலி பிசான சாகுபடி செய்வதற்கு கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து இன்று 30.09.2022 முதல் 26.02.2023 வரை 150 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 25 க.அடி அளவுக்கு மிகாமல், பாசன பருவகாலத்தின் மொத்த தேவையான 1189.34 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டத்தில் 9514.70 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

# இயக்குநர் பாரதிராஜாவுடன் ஓ. பன்னீர் செல்வம் சந்திப்பு



**சென்னை, செப். 30-**

உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவை, ஓ.பன்னீர்செல்வம் அவரது இல்லத்தில் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்.

சமீபத்தில் உடல்நலக்குறைவால் சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இயக்குநர் பாரதிராஜா குணமடைந்து வீடு திரும்பினர். இதையடுத்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு மீண்டும் அவர் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் நலமுடன் வீடு திரும்பினார். அவருக்கு வாழ்த்து தெரிவித்திருந்த கமல்ஹாசன், நலம் பெற்று வீடு திரும்பிய பாரதிராஜா, அம்மகிழ்ச்சியான செய்தியை என்னுடன் தொலைபேசியில் பகிர்ந்து கொண்டார். மருத்துவமனையில் நலம் விசாரிக்கச் சென்ற போது, ஆஸ்பத்திரியில் உங்களைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை.

சீக்கிரம் வீடு திரும்புங்கள், நான் புறப்படுகிறேன் என்று சொன்னேன். ஓகே சீ யூ லேட்டர் பார் ஷூர் என்று ஆங்கிலத்தில் சொல்லி வழியனுப்பினார். சொன்ன வாக்கைக் காப்பாற்றிய என் தேனிக்கார நண்பருக்கு இந்தப் பரமக்குடியானின் வாழ்த்துக்கள் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது நலம் பெற்று வீடு திரும்பியிருக்கும் இயக்குநர் பாரதிராஜாவை முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார். இந்த சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் வெளியாகியுள்ளது.

# ஆங்சான் சூயிக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை

**நெய்பிடாவ், செப். 30-**

தேர்தல் மோசடி வழக்கில் மியான்மர் நாட்டு தலைவர் ஆங்சான் சூகிக்கு அந்நாட்டு நீதிமன்றம் மேலும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

மியான்மரின் ராணுவ ஆட்சியை எதிர்த்து பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தியவர் ஆங்சான் சூகி. மியான்மரில் கடந்த 2020, நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் சூகியின் தேசிய ஜனநாய லீக் கட்சி ஆட்சியை பிடித்தது. என்றாலும் தேர்தலில் மோசடி நடந்ததாக கூறி கடந்த ஆண்டு பிப்ரவரியில் ராணுவம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது. அதை தொடர்ந்து ஆங்சான் சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

அவர் மீது ராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சியை தூண்டியது, கொரோனா விதிகளை மீறியது, அலுவலக ரீதியான சட்டங்களை மீறியது, ஊழல் முறைகேடுகள் என வழக்குகள் தொடரப்பட்டன. இது தொடர்பான விசாரணை மியான்மர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதில் கடந்த டிசம்பரில் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்த நீதிமன்றம், பிறகு பல்வேறு வழக்குகளில் 17 ஆண்டுகள் வரை தண்டனையை நீட்டித்தது.

இந்நிலையில் தேர்தல் முறைகேடு வழக்கில் சூகிக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சூகிக்கு இது வரை 11 வழக்குகளில் 20 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மீது மேலும் பல்வேறு வழக்குகள் உள்ளன. அனைத்திலும் தண்டனை விதிக்கப்பட்டால் அவர் கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் சிறை தண்டனையை எதிர்கொள்ள நேரிடலாம் என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

சூகி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதையும், அதிகாரத்தின் மீதான இராணுவத்தின் பிடிக்கு சவால் விடுவதையும் நோக்கமாகக் கொண்டதாக ராணுவ எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். மியான்மரின் நீதிமன்றங்கள் சுதந்திரமானவை என்றும், கைது செய்யப்பட்டவர்கள் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ராணுவ ஆட்சிக்குழு வலியுறுத்தி உள்ளது.

# பி.எப்.ஐ அமைப்பிற்கு தடை விதித்து அரசாணை வெளியிட்டது தமிழக அரசு

**சென்னை, செப். 30-**

தமிழகத்தில் பாப்புலர் பிரண்ட் அமைப்புக்கு தடைவிதித்து மாநில அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு மீது நாட்டில் பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டம், பயங்கரவாத செயல்களுக்கு நிதிஉதவி அளித்தல், பயங்கரவாத செயலுக்கு பயிற்சி, பயங்கரவாத செயலுக்கு ஆட்கள் சேர்த்தல் உள்பட பல்வேறு புகார்கள் எழுந்தன. இது, தொடர்பாக 15 மாநிலங்களில் 93 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு மற்றும் அமலாக்கத்துறையினர் கடந்த 22-ம் தேதி அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் 106 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சோதனைக்கு கண்டனம் தெரிவித்து நடந்த போராட்டத்தில் பல இடங்களில் கல்வீச்சு, வன்முறை சம்பவங்களும் அரங்கேறியது. குறிப்பாக, தமிழகம், கேரளாவில் பெட்ரோல் வீச்சு சம்பவங்களும் அரங்கேறியது. இதனை தொடர்ந்து, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகா, அசாம், டெல்லி, குஜராத், மராட்டியம், தெலுங்கானா ஆகிய 8 மாநிலங்களில் பி.எப்.ஐ. தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்றது.

இந்த சோதனையின் போதும் பலர் கைது செய்யப்பட்டனர். இந்த 2 சோதனைகளின் போதும் பல்வேறு சர்ச்சைக்குரிய ஆவணங்கள், பணம், டிஜிட்டல் கருவிகள் கைப்பற்றப்பட்டன. இதனை தொடரந்து, பி.எப்.ஐ. மற்றும் அதன் துணை அமைப்புகளை சட்டவிரோத அமைப்புகளாக அறிவித்த மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அமைப்புகள் 5 ஆண்டுகள் இந்தியாவில் செயல்பட தடை விதித்து அதிரடி உத்தரவை பிறப்பித்தது.

இந்த உத்தரவை செயல்படுத்தும் விதமாக பல்வேறு மாநில அரசுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்து வருகின்றன. அந்த வகையில், தமிழகத்தில் 12 மாவட்டங்களில் உள்ள துணை ஆணையர்கள் முழு உஷார் நிலையில் இருக்கவும், சென்னையில் முழுவதும் 4 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடவும் காவல் ஆணையர் சங்கர் ஜிவால் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் பி.எப்.ஐ. அமைப்பை சட்டவிரோத அமைப்பாக மத்திய அரசு அறிவித்ததை தொடர்ந்து, தமிழகத்தில் பி.எப்.ஐ. அமைப்புக்கு தடைவித்து தமிழக அரசு அதிகாரப்பூர்வமான அரசாணையை வெளியிட்டுள்ளது.

# மருத்துவமனையில் இருந்து இல்லம் திரும்பினார்: அமைச்சர் அன்பில் மகேஷ்

**சென்னை, செப். 30-**

இன்புளூயன்சா காய்ச்சலால் சிகிச்சை பெற்று வந்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குணமடைந்ததை தொடர்ந்து நேற்று மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் மற்றும் சளியால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். சென்னையில் உள்ள எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஒரே நாளில் 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் காய்ச்சலால் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில், கடந்த 25-ம் தேதி தலைமைச் செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் நடந்து முடிந்தது. இதனை தொடரந்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து இவர் சிகிச்சைக்காக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றார். அங்கு அவருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் கொரோனா இல்லை என தெரியவந்தது. பின்னர், அவரை 2 நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுமாறு மருத்துவர்கள் கேட்டுக் கொண்டனர். அதன் பேரில் அன்பில் மகேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்போது அவருக்கு எடுக்கப்பட்ட ரத்த பரிசோதனையில் எச்1,என்1 வகை இன்புளூயன்சா வைரல் காய்ச்சல் இருப்பது உறுதியானது. இதனை தொடர்ந்து அவருக்கு மருத்துவர்கள் தகுந்த சிகிச்சை அளித்து வந்தனர். தற்போது சிகிச்சைக்கு பின்னர் அமைச்சர் அன்பில் மகேஷ் குணமடைந்ததால் மருத்துவமனையில் இருந்து நேற்று வீடு திரும்பினார்.

# கோவையில் மகாத்மா காந்தி நினைவகம் திறப்பு விழா அக்டோபர் 2 - ல் நடைபெறுகின்றது

**கோவை, செப் 30-**

கோவையில் மகாத்மா காந்தி நினைவகம் திறப்பு விழா வரும் அக்டோபர் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதுகுறித்து கோவை குமரகுரு கல்வி குழுமங்களின் தலைவரும் மகாத்மா காந்தி நினைவகத்தின் தலைவருமான டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர், ஜி.டி குழுமங்களின் நிர்வாக இயக்குனரும் மகாத்மா காந்தி நினைவகத்தின் துணைத் தலைவருமான ஜி.டி. கோபால் மற்றும் மகாத்மா காந்தி நினைவகததின் பொருளாளருமான ஆகிலா ஆகியோர் கூறியதாவது :-

கோவை மாநகரம் மகாத்மாவுடன் ஒரு சிறப்பான பிணைப்பைக் கொண்டிருந்தது. மகாத்மா, இப்பகுதியின் தேசிய உணர்விற்கும், அதன் வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு வகித்துள்ளார். மகாத்மா மூன்று முறை கோவைக்கு வந்துள்ளார் இங்கு அவருடன் தொடர்புடைய வரலாற்றுச் சின்னங்கள், என்றும் அழியாச் சுவடுகளாகவுள்ளன.

1934-ஆம் ஆண்டு பிப்ரவரி 6 மற்றும் 7 ஆம் தேதிகளில் போத்தனூரில் மகாத்மா தங்கிய ஜி.டி.நாயுடு குடும்பத்தின் எளிய ஓட்டு வீடு, இன்றும் முக்கிய வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது. இந்த இல்லம், மகாத்மாவின் நினைவையும் சிந்தனைகளையும் உள்ளடக்கியது. இந்த நோக்கத்துடன்தான், டாக்டர்.பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், ஜி டி குழுமத்தின் தலைவர், ஜி.டி. கோபால், இந்த இல்லத்தை புனரமைப்பதன் மூலம் மகாத்மாவுக்கு நினைவகம் அமைக்கும் உன்னத முயற்சியில் ஈடுபட்டார். ஸ்ரீ வினோபா பாவே மற்றும் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் உள்ளிட்ட உயரிய தலைவர்களுடன் பணியாற்றிய புகழ் பெற்ற காந்தியவாதியும் சமூக ஆர்வலருமான கிருஷ்ணம்மாள் ஜகந்நாதனால் அக்டோபர் 02 ஆம் தேதி மகாத்மாவின் 153 வது பிறந்தநாளில் இந்நினைவகம் திறக்கப்படவுள்ளது என்று கூறினார்கள்.

**மரம் மனிதனின் உரம்**

# இலங்கையில் அரசு ஊழியர்கள் வலைதளங்களை பயன்படுத்த தடை

**கொழும்பு, செப். 30-**

இலங்கையில் அரசு ஊழியர்கள் சமூக வலைதளங்களில் கருத்துகளை பதிவிட தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் தவித்த மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். அதிபர் மாளிகை உள்ளிட்ட அரசு கட்டிடங்களை போராட்டக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் அரசு ஊழியர்கள் சமூக வலைதளங்களில் கருத்துகளை பதிவிட தடை விதிக்கப்பட்டு உள்ளது.

உணவு பற்றாக்குறை காரணமாக பள்ளிகளில் மாணவர்கள் மயக்கம் அடைந்து வருவதாக மாகாண சுகாதார அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தெரிவித்து இருந்தனர். இதையடுத்து அரசு ஊழியர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த இலங்கை அரசு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்ட உத்தரவில்,

ஒரு பொது அதிகாரி சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளிப்படுத்துவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும் குற்றமாகும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு இருப்பதாக கூறப்படுவதை சுகாதார அமைச்சர் ரம்புலெல்லா மறுத்தார். அரசியல் உந்துதல் காரணமாக பொது சுகாதார ஊழியர்கள் குற்றச்சாட்டுகளை கூறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக திருக்கோவில்களில் யு.பி.ஐ. மூலம் கட்டணம் செலுத்தும் வசதி

## அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைத்தார்



சென்னை, செப். 30-

திருக்கோவில்களில் கடன் அட்டை, பற்று அட்டை மற்றும் ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு மூலமாக கட்டணம் செலுத்தும் வசதியினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோவில்களில் இணையவழி சேவையினை மேம்படுத்தும் பொருட்டு, கட்டண சேவை வசதியினை எளிமைப்படுத்தவும், விரைவுபடுத்தவும் மற்றும் கட்டண சீட்டு மையங்களில் கூட்டத்தினை கட்டுப்படுத்தவும் பக்தர்களிடமிருந்து சேவைக்கான கட்டணத்தை ரொக்கமாக பெற்றுக் கொண்டு கையடக்க கருவிகள் மூலம் கட்டண சீட்டுகள் வழங்கும் முறை கடந்த 28.04.2022 அன்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இதன் மூலம் 471 திருக்கோயில்களுக்கு 1,550 கையடக்க கருவிகள் வழங்கப்பட்டு, நாளது தேதி வரை 51,32,265 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு 22.91 கோடி ரூபாய் திருக்கோயில்களுக்கு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

பக்தர்களின் சேவைகளை மேலும் விரைவுபடுத்தும் நோக்கத்துடனும், மின்னணு பணப் பரிமாற்றத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் கடன் அட்டை, பற்று அட்டை மற்றும் ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு மூலமாக கையடக்க கருவிகளில் கட்டணம் செலுத்தும் வசதியினை நேற்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சேவைகளுக்கு கட்டணம் செலுத்திய பக்தர்களுக்கு கட்டண சேவை ரசீதினையும் அமைச்சர் சேகர்பாபு வழங்கினார்.

இத்திட்டம், முதற்கட்டமாக, 471 திருக்கோயில்களில் செயல்படுத்தப்படுகிறது. துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இதர திருக்கோயில்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, அனைத்து திருக்கோயில்களிலும் அச்சடித்த சீட்டுகளுக்கு பதிலாக கணிணி வழி கட்டணச் சீட்டுக்கள் மட்டுமே வழங்கும் நடைமுறை ஏற்படுத்தப்படும்.

இந்த சேவை பாரத ஸ்டேட் வங்கி மற்றும் தேசிய தகவலியல் மையத்துடன் இணைந்து இந்து சமய அறநிலையத்துறையின் ஒருங்கிணைந்த திருக்கோயில் மேலாண்மைத் திட்ட மென்பொருள் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

இந்த வசதியினை திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

# நெல் கொள்முதலை கண்காணிக்க சிறப்பு அதிகாரிகள் நியமனம்

## தமிழக அரசு உத்தரவு

சென்னை, செப். 30-

டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதலை கண்காணிக்க சிறப்பு அதிகாரிகளை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. கடலூர், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நடைபெறும் நெல் கொள்முதலை கண்காணிக்க சிறப்பு அதிகாரிகளை நியமித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. கடலூருக்கு ராஜாராமன், தஞ்சாவூருக்கு சிவஞானம், திருவள்ளூருக்கு கற்பகம், திருநெல்வேலிக்கு சங்கர் என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இவர்கள் விவசாயிகளிடம் நெல் குறைந்தபட்ச ஆதார விலைக்கு வாங்கப்படுகிறதா என்பதையும் விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலை கிடைக்கிறதா என்பதையும் அவர்கள் கண்காணிப்பாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 வார பயணமாக தமிழக பா.ஜ.க. தலைவர்

# அண்ணாமலை இன்று அமெரிக்கா பயணம்

சென்னை, செப். 30-



தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இரு வார பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

கடந்த ஏப்ரல் 30-ம் தேதி, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை இலங்கை சென்றார். யாழ்பாணம் உட்பட பல பகுதிகளுக்கு சென்ற அவர், இலங்கை தமிழர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் என பலரையும் சந்தித்து பேசினார். இந்நிலையில், அண்ணாமலை இன்று அமெரிக்கா செல்கிறார். அவர் தன் உயர் கல்வி தொடர்பாகவே, அமெரிக்கா செல்வதாக தெரிகிறது. இருப்பினும், அந்நாட்டில் உள்ள தமிழர்களையும் சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார். அமெரிக்க பயணத்தை முடித்து, அக்டோபர் 12-ம் தேதி அண்ணாமலை சென்னை திரும்ப உள்ளார்.

காந்திநகர் - மும்பை சென்டிரல் இடையேயான

# நாட்டின் 3-வது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் பயணம்

## பிரதமர் மோடி இன்று துவக்கி வைக்கிறார்

புதுடெல்லி, செப். 30-



பிரதமர் மோடி காந்திநகர் மற்றும் மும்பை சென்டிரல் இடையேயான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயிலை இன்று கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

அடுத்த 3 ஆண்டுகளில் 400 புதிய தலைமுறைக்கான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில்களை இயக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது என மத்திய ரெயில்வே அமைச்சகம் தெரிவித்து உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த பிப்ரவரியில் பட்ஜெட்டின் போது, வெளியிடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக காந்திநகர் மற்றும் மும்பை சென்டிரல் இடையேயான புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்துடன் கூடிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயிலை பிரதமர் மோடி இன்று கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சி இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து, எக்ஸ்பிரஸ் ரெயிலில் காந்திநகரில் இருந்து காலுபூர் வரை பிரதமர் மோடி பயணம் செய்கிறார். இந்த ரெயில்களின் கூடுதல் சிறப்பம்சம், இதுவரை பயன்படுத்தப்பட்ட ஸ்டீலுக்கு பதிலாக எடை குறைந்த அலுமினியம் பயன்படுத்தப்படும். இதனால், 50 டன்கள் எடை குறைவதுடன், குறைவான அளவிலேயே ஆற்றலை உபயோகப்படுத்தும்.

பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கும் ரெயில் நாட்டின் 3-வது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் ஆகும். இதற்கு முன்பு, புதுடெல்லியில் இருந்து வாரணாசி செல்லும் ரெயில் 2019-ம் ஆண்டு பிப்ரவரியிலும், மற்றொரு ரெயில் புதுடெல்லியில் இருந்து ஸ்ரீ மாதா வைஷ்ணவ தேவி கத்ரா இடையே 2019-ம் ஆண்டு அக்டோபரிலும் தொடக்கி வைக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி தனியார் பள்ளியை

# அரசே ஏற்று நடத்தக் கோரிய வழக்கு ஐகோர்ட்டில் தள்ளுபடி

சென்னை, செப். 30-

கள்ளக்குறிச்சியில் கலவரத்தால் சேதமடைந்த தனியார் பள்ளியை அரசு ஏற்று நடத்தக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூரில் உள்ள தனியார் பள்ளியில் மாணவி ஒருவர் மரணமடைந்தார். இந்த சம்பவத்தை தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் நடந்த கலவரத்தில், பள்ளிக் கட்டிடம், வாகனங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் சேதப்படுத்தப்பட்டன.

மாணவி மரணம் தொடர்பாக சிபிசிஐடி போலீஸாரும், கலவரம் தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழுவும் தனித்தனியாக வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், பள்ளி மீண்டும் செயல்பட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே பள்ளியை அரசு ஏற்று நடத்த உத்தரவிடக் கோரி தேசிய மக்கள் சக்தி கட்சி தலைவர் ரவி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், "பள்ளி விடுதிக்கு அங்கீகாரம் பெறாததால், பள்ளியை அரசு ஏற்று நடத்தக் கோரி செப்டம்பர் 14-ம் தேதி மனு அளித்தேன். ஆனால் அந்த மனு இதுவரை பரிசீலிக்கப்படவில்லை. எனவே, மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, சிறப்பு அதிகாரியை நியமித்து பள்ளியை அரசு தன் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி ராஜா மற்றும் நீதிபதி கிருஷ்ணகுமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள்," தமிழகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு விதமான பிரச்சினைகள் உள்ளன. அதற்காக அரசு ஏற்க வேண்டும் என கோர முடியுமா? அரசே ஏற்க வேண்டும் என்றால் நிலம், கட்டிடங்களுக்கு விலை கொடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இருக்கிறது தெரியுமா? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாகிறார் எஸ்.முரளிதர்

சென்னை, செப். 30-



ஒடிசா ஐகோர்ட் தலைமை நீதிபதி எஸ். முரளிதரை சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலித் தலையிலான சுப்ரீம் கோர்ட் கொலீஜியம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

நீதிபதிகள் டி.ஒய். சந்திராசூட் மற்றும் சஞ்சய் கிஷன் கௌல் ஆகியோர் அடங்கிய கொலீஜியம், ஐகோர்ட் நீதிபதிகள் இடமாற்றம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசிக்க புதன்கிழமை கூடியதாக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த கூட்டத்தில் நீதிபதி முரளிதரை சென்னை ஐகோர்ட்டுக்கு இடமாற்றம் செய்ய கொலீஜியம் தீர்மானித்துள்ளது.

எஸ்.முரளிதர் சென்னை சட்டக் கல்லூரியில் படித்தவர் ஆவார். தமிழகத்தை பூர்விகமாகக் கொண்ட நீதிபதி முரளிதர், மே 2006-ல் டெல்லி ஐகோர்ட்டின் நீதிபதியாக நியமிக்கப்பட்டவர். பின்னர் மார்ச் 6, 2020 அன்று பஞ்சாப் மற்றும் அரியானா ஐகோர்ட்டுக்கு மாறுதல் செய்யப்பட்டார். ஜனவரி 4, 2021 அன்று ஒடிசா ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார். பஞ்சாப் மற்றும் அரியானா, மும்பை மற்றும் கர்நாடக ஐகோர்ட்டுகளுக்கு 20 நீதிபதிகளை நியமிக்க கடந்த 12-ம் தேதி தலைமை நீதிபதி லலித் தலைமையிலான கொலிஜியம் ஒப்புதல் அளித்தது.

வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசிநாள்:

# காங்., தலைவர் தேர்தலில் கெலாட் போட்டியில்லை

## சசிதரூர் - திக்விஜய்சிங் இடையே நேரடி போட்டி

புதுடெல்லி, செப். 30-



காங்கிரஸ் தலைவர் தேர்தலில் திடீர் திருப்பமாக தலைவர் பதவிக்கு போட்டியிடப் போவதில்லை என அசோக் கெலாட் அறிவித்துள்ளார். இதையடுத்து சசிதரூர் - திக்விஜய்சிங் இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 17-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் 24ந் தேதி தொடங்கியது. இன்று மனுதாக்கல் செய்ய கடைசி நாளாகும். இந்த தேர்தலில் ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட்டும், அவரை எதிர்த்து கேரள எம்பி சசிதரூரும் களம் இறங்குவார் என கூறப்பட்டது.

ஆனால், ராஜஸ்தான் காங்கிரசிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக சோனியா காந்தி, கெலாட் மீது அதிருப்தியில் உள்ளதாக தெரிகிறது. இதனால் இந்த தேர்தலில் கெலாட் போட்டியிடுவாரா? என்ற சந்தேகம் எழுந்தது. இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிடப்போவதில்லை என்று ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார். சோனியா காந்தியை சந்தித்த பிறகு அசோக் கெலாட் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

அசோக் கெலாட் இது பற்றி கூறுகையில், "ராஜஸ்தானில் ஏற்பட்ட நெருக்கடியால் நான் வருத்தம் அடைந்தேன். சோனியா காந்தியிடம் மன்னிப்பு கோரினேன். காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு நான் போட்டியிடவில்லை" என்றார். ராஜஸ்தான் முதல் மந்திரியாக நீங்கள் நீடிப்பீர்களா? என்று கேட்டதற்கு 'இது பற்றி சோனியா காந்தி முடிவு செய்வார்' என்றார் கெலாட்.

இதற்கிடையே காங்கிரஸ் தலைவர் தேர்தலில், திடீர் திருப்பமாக மத்திய பிரதேச மாநில முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான திக்விஜய் சிங் போட்டியிடுகிறார். எனவே, இவருக்கும் சசி தரூருக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

முன்னதாக காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிடப்பவோவதாக நேற்று திக்விஜய் சிங் அதிகார பூர்வமாக தெரிவித்தார். டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் வேட்பு மனுவை திக்விஜய் சிங் நேற்று வாங்க வந்தார். அப்போது அவர் தலைவர் தேர்தலில் போட்டியிட மனு வாங்க வந்ததாக தெரிவித்தார். இன்று மனு தாக்கல் செய்ய இருப்பதாகவும் திக்விஜய் சிங் தெரிவித்தார்.

அதிருப்தி குழு தலைவர்களில் ஒருவரான சசிதரூரும் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுகிறார். அவரும் இன்று மனு தாக்கல் செய்கிறார். இதனால் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான களத்தில் நேரடியாக திக்விஜய் சிங், சசிதரூர் போட்டியிடுகிறார்கள்.

மத்திய அரசு தடை எதிரொலி:

# பி.எஃப்.ஐ. அமைப்பின் டுவிட்டர் பக்கம் நீக்கம்

புதுடெல்லி, செப். 30-

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பிற்கு மத்திய அரசு 5 ஆண்டுகள் தடை விதித்ததை தொடர்ந்து தற்போது அந்த நிறுவனத்தின் டுவிட்டர் பக்கம் நீக்கப்பட்டுள்ளது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு பயங்கரவாத தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டது, பயங்கரவாத செயல்களுக்கு நிதிஉதவி அளித்தது, பயங்கரவாத செயலுக்கு பயிற்சி, பயங்கரவாத செயலுக்கு ஆட்கள் சேர்த்தல் உள்ளிட்ட பல்வேறு புகார்கள் எழுந்தன.

இது, தொடர்பாக 15 மாநிலங்களில் 93 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு, அமலாக்கத்துறை கடந்த 22-ம் தேதி அதிரடி சோதனை நடத்தியது. இந்த சோதனையில் 106 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சோதனைக்கு கண்டனம் தெரிவித்து நடந்த போராட்டத்தில் பல இடங்களில் கல்வீச்சு, வன்முறை சம்பவங்களும் அரங்கேறியது. குறிப்பாக, தமிழ்நாடு, கேரளாவில் பெட்ரோல் வீச்சு சம்பவங்களும் அரங்கேறியது.

இதனை தொடர்ந்து, உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், கர்நாடகா, அசாம், டெல்லி, குஜராத், மராட்டியம், தெலுங்கானா ஆகிய 8 மாநிலங்களில் பிஎப்ஐ தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்றது. இந்த சோதனையின் போதும் பலர் கைது செய்யப்பட்டனர். இந்த 2 சோதனைகளின் போதும் பல்வேறு சர்ச்சைக்குரிய ஆவணங்கள், பணம், டிஜிட்டல் கருவிகள் கைப்பறப்பட்டன.

இதனை தொடரந்து, பிஎப்ஐ மற்றும் அதன் துணை அமைப்புகளை சட்டவிரோத அமைப்புகளாக அறிவித்த மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அமைப்புகளுக்கு இந்தியாவில் 5 ஆண்டுகள் தடை விதித்து அதிரடி உத்தரவை பிறப்பித்தது. இதனை தொடர்ந்து பி.எப்.ஐ.அமைப்பின் இணையதள பக்கம் முடக்கப்பட்டது. இந்த நிலையில், மத்திய அரசின் தடையை தொடர்ந்து டுவிட்டர் நிறுவனம் பி.எப்.ஐ. அமைப்பின் டுவிட்டர் பக்கத்தை நீக்கியுள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12,303 கன அடியாக அதிகரிப்பு

சேலம், செப். 30-


மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரத்து 303 கன அடியாக அதிகரித்துள்ளதை தொடர்ந்து அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 118.70 அடியாக இருந்த நிலையில், நேற்று மேலும் உயர்ந்து 118.76 அடியாக உயர்ந்துள்ளது.

கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து 5 ஆயிரம் கன அடி உபரி நீர் தற்போது காவிரியில் திறந்து விடப்பட்டுள்ளது. இதற்கிடையே கர்நாடகா மற்றும் தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை பெய்வதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஒகேனக்கல்லில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு 9 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து தற்போது 14 ஆயிரம் கன அடிக்கும் அதிகமாக வருகிறது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்பட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. . ஒகேனக்கல் காவிரியில் வரும் தண்ணீர் அப்படியே மேட்டூர் அணைக்கு வருகிறது.

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 11 ஆயிரத்து 700 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை மேலும் அதிகரித்து 12 ஆயிரத்து 303 க ன அடியாக வந்து கொண்டிருந்தது. மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் டெல்டா பாசனத்திற்கு நேற்று முன்தினம் 10 ஆயிரம் கன அடி தண்ணீரும், கால்வாயில் 900 கன அடி தண்ணீரும் என மொத்தம் 10 ஆயிரத்து 900 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. நேற்றும் அதே அளவில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து குறைந்த அளவே தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 118.70 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று மேலும் உயர்ந்து 118.76 அடியானது. இனி வரும் நாட்களில் நீர்வரத்து மேலும் அதிகரித்தால் மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் வேகமாக உயர வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தமிழகத்தில் 4 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, செப். 30



தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர கடலோரப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (செப்.30-ம் தேதி) தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அக்.1 முதல் அக்.3- தேதி வரை, தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்த வரையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

# தங்கம் விலை கிடு கிடு உயர்வு: சவரனுக்கு 440 ரூபாய் அதிகம்

சென்னை, செப். 30-



தங்கம் விலை கிடுகிடுவென உயர்ந்து நேற்று சவரனுக்கு 440 ரூபாய் அதிகரித்து விற்பனையானது.

சென்னையில் கடந்த 22-ம் தேதி முதல் தங்கம் விலை சரிந்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் பவுன் ரூ.36,880ஆக இருந்த தங்கத்தின் விலை நேற்று ரூ.37 ஆயிரமாக அதிகரித்தது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் தங்கத்தின் விலை பவுன் ரூ.440 உயர்ந்து ரூ.37 ஆயிரத்து 440-க்கு விற்பனை ஆனது.. கிராம் ரூ.4.625-ல் இருந்து ரூ.4.680 ஆக உயர்ந்து இருக்கிறது. தங்கத்தின் விலை நேற்று ஒரே நாளில் கிராம் ரூ.55 உயர்ந்தது. இதேபோல வெள்ளி விலையும் அதிகரித்தது. கிராம் ரூ.60-ல் இருந்து ரூ.61.50 ஆகவும், கிலோ ரூ.60 ஆயிரத்தில் இருந்து ரூ.61 ஆயிரத்து 500 ஆகவும் அதிகரித்து இருக்கிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



மக்கள் மனதில் மதவெறியைத் தூண்டி, தமிழ்நாட்டை கலவர பூமியாக மாற்ற திட்டமிட்டிருந்த ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் பேரணிக்கு அனுமதி மறுத்துள்ள தமிழக அரசின் முடிவு மிகச்சரியான முடிவு.

\- சீமான்



தமிழகத்தில் அரசு கட்டிடங்களில் சட்டவிரோதமாக சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த விளம்பரங்களை அழித்து விட்டு, அந்த இடங்களை அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், பொது இடங்களைக் கெடுக்கும் விளம்பரங்களை அகற்ற நீதிமன்றங்களை நாட வேண்டியிருக்கும்.

\- அன்புமணி



கோர்ட்டின் அனுமதி இருந்தும் கூட ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு தடைவிதித்திருப்பது வரவேற்க்கதக்கது. முதல்வர் மதசார்பின்மை மீது அசைக்க முடியாது நம்பிக்கை கொண்டவர். எனவே அவர் எடுத்துள்ள இந்த நடவடிக்கை மிகவும் சிறப்புடையது.

\- கே.எஸ்.அழகிரி



ரேஷன் பணியாளர்களை மாவட்ட ஆள்சேர்ப்பு மையங்கள் மூலம் நேர்காணலின் அடிப்படையில் மட்டும் தேர்ந்தெடுக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட்டு விட்டு டி.என்.பி.எஸ்.சி மூலம் ரேஷன் கடை பணியாளர்களை தேர்ந்தெடுக்க தமிழக அரசு ஆணையிட வேண்டும்.

\- ராமதாஸ்



விலைவாசி, வீட்டு வரி, சொத்துவரி மற்றும் மின் கட்டண உயர்வு ஆகியவற்றை கண்டித்து விருதுநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் சிவகாசி அருகே திருத்தங்கல் அண்ணாமலையார் நகர் அம்மா திடலில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசினார். இதில் முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி.உதயகுமார், மணிகண்டன், விஜயபாஸ்கர், ராஜலட்சுமி, கடம்பூர் ராஜு, மா.பா.பாண்டியராஜன், வைகைச்செல்வன், கோகுல இந்திரா, முன்னாள் டெல்லி சிறப்பு பிரதிநிதி தளவாய் சுந்தரம், கடையநல்லூர் எம்.எல்.ஏ குட்டியப்பா மற்றும் கட்சித் தலைமை நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.பி.க்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மற்றும் சிவகாசியில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள மதுரைவிமானநிலையம்வருகைதந்தஅ.தி.மு.க.இடைக்காலபொதுச்செயலாளர்எடப்பாடி பழனிச்சாமிக்கு மாநகர் மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை துணைத்தலைவர் அனுப்பானடி எஸ். பாலகுமார் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து பெற்றார். அருகில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. உள்ளார்.

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் நியமனம்: மாவட்டச் செயலாளராக சேடபட்டி மு.மணிமாறன் போட்டியின்றி தேர்வு

**திருமங்கலம்.செப்.30.**

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகளின் பட்டியலை தி.மு.க தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது.அதன்படி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வின் மாவட்டச் செயலாளராக சேடபட்டி மு.மணிமாறன் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளாhர்.



தி.மு.க 15வது பொதுத் தேர்தல் முடிவின்படி தி.மு.க.வின் மாவட்ட கழக, மாநகரக் கழக, பொதுக்குழு, தலைமைச் செயற்குழு, மாவட்டங்களில் தேர்ந்தெடுக் கப்பட்ட செயலாளர்கள், மாநகர, பேரூர், பகுதி, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகளின் பட்டியலை தி.மு.க தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது.அதன்படி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் பட்டியலின் விபரம்: மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க அவைத்தலைவராக டி.நாகராஜன், மாவட்டச் செயலாளராக சேடபட்டி மு.மணிமாறன், துணைச் செயலாளர்களாக ஆர்.பாலாஜி, சி.சிவனாண்டி, அ.லதாஅதியமான், பொருளாளராக தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக ஏர்போர்ட் பாண்டி, முத்துராமன், மா.ஞானசேகரன், கே.இளமகிழன், பொதுக்குழு உறுப்பினர்களாக ஆதிமூலம், எம்.சிவமுருகன், டி.செல்வம், வழக்கறிஞர் சரவணன், க.செந்தாமரை கண்ணன், இந்திராகாந்தி, ஒன்றிய கழகச் செயலாளர்களாக டி.கல்லுப்பட்டி-நாகராஜன், திருப்பரங்குன்றம் கிழக்கு-சி.தனபாலன், திருப்பரங்குன்றம் மேற்கு-வீ.பெரியசாமி, திருப்பரங்குன்றம் தெற்கு-வெ.வேட்டையன், நகரக் கழகச் செயலாளர்களாக திருமங்கலம்-மு.சி.சோ.பா.ஸ்ரீதர், உசிலம்பட்டி எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன், பேரூர் கழகச் செயலாளர்களாக பேரையூர்-எம்.எஸ்.எம்.பாஸ்கர், தே.கல்லுப்பட்டி-நா.முத்துக்கணேசன், எழுமலை-ஆர்.பி.ஜெயராமன், பகுதிக் கழக செயலாளராக அவனியாபுரம் கிழக்கு-கே.மணிசேகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளராக பதவியில் உள்ள சேடபட்டி.மு.மணிமாறன் போட்டியின்றி மீண்டும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளராக தேர்வு செய்யப் பட் டுள் ளார்.இ தனை தொடர்ந்து போட்டியின்றி மீண்டும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சேடபட்டி மு.மணிமாறனுக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து தொவித்து வருகின்றனர்.

# ராமநாதபுரம் அருகே உச்சிப்புளியில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் தயாரிக்க பயிற்சி



**ராமநாதபுரம்,செப்.30-**

ராமநாதபுரம் அருகே உச்சிப்புளியில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பில் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தை சேர்ந்த கோரவள்ளி கிராமத்தில் இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது .மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இப்பயிற்சி செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தயாரிப்பதற்கு கோரவள்ளி கிராமத்தில் 20 விவசாயிகள் கொண்ட குழு தேர்வு செய்யப்பட்டது.

இந்நிகழ்சியில் வேளாண் துணை இயக்குனர் சேக் அப்துல்லா கலந்து கொண்டு குழு உறுப்பினர்களிடையே பஞ்சகாவ்யம், மூலிகை பூச்சி விரட்டி, அமிர்தகரைசல், மீன் அமிலம், கணஜீவாமிர்தம் மற்றும் தசகாவ்யம் ஆகியனவற்றை இயற்கை முறையில் தயாரிக்கும் முறைகள் மற்றும் இதனை பயிர்களுக்கு பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கவுரையாற்றினார். திருப்புல்லாணி வேளாண் உதவி இயக்குனர் அமர்லால் இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தயாரிப்பதற்கு தேவையான பயிற்சிகள் தரப்படும் மேலும் இதனை செயல்படுத்தும் குழுக்களுக்கு அரசு வழங்கும் நிதிஉதவிகள் மற்றும் மானியதிட்டங்கள் குறித்து விவசாயிகளிடையே விளக்கி கூறினார்.

மேலும் விவசாயிகள் ஒரு சில வாரங்களில் நெற்பயிரில் விதைப்பு பணி மேற்கொள்ள இருப்பதனால், நெல் விதைகளை 1 சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு விதை கடினப்படுத்துதல் மற்றும் அசோஸ்பைரில்லம் , பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர்உரங்களை கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறைகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி செய்முறை விளக்கம் செய்து காட்டி விளக்கினார். பயிற்சியில் nஜயமணி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்தல் குறித்து பேசினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் முகமது யூசூப் செய்திருந்தார்.

## பரிசோதிக்கப்பட்ட 4 மாதிரிகளில் 1 மாதிரியின் மொத்த கொலஸ்ட்ரால் அளவு அசாதாரணமாக உள்ளது :எஸ்.ஆர்.எல். டயக்னஸ்டிக் தரவு ஆய்வு

**சென்னை, செப் 30-**

இருதய நோய்கள் (CVDs) என்பது இதயம் மற்றும் இரத்த நாளங்களின் கோளாறுகள் ஆகும். இதில் கரோனரி இதய நோய், செரிப்ரோவாஸ்குலர் நோய், புற தமனி நோய், வாத இதய நோய், பிறவி இதய நோய், ஆழமான நரம்பு இரத்த உறைவு மற்றும் நுரையீரல் எம்போலிசம் ஆகியவை அடங்கும். உடல் பருமன் மற்றும் உயர் இரத்த அழுத்தம் தவிர, அசாதாரண கொழுப்புகள் இருதய நோய்களை வளர்ப்பதற்கான ஆபத்து காரணியாகும். உலகளவில் இருதய நோய்களின் (CVD) அதிக சுமைகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியாவில் CVD நோயினால் ஏற்படும் ஆண்டு இறப்புகளின் எண்ணிக்கை 2.26 மில்லியனிலிருந்து (1990) 4.77 மில்லியனாக (2020) உயர்ந்துள்ளது. இந்தியாவில் கரோனரி இதய நோய் பரவல் விகிதம் கடந்த பல தசாப்தங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் கிராமப்புற மக்களில் 1.6% முதல் 7.4% வரை மற்றும் நகர்ப்புற மக்களில் 1% முதல் 13.2% வரை உள்ளது.

இது குறித்து சென்னை எஸ்ஆர்எல் டயக்னாஸ்டிக்ஸ் ஆய்வகத்தின் தலைவர் டாக்டர் சி.என். சீனிவாஸ் கூறுகையில், CVD ஆபத்தில் உள்ள நபர்கள் உயர் இரத்த அழுத்தம், குளுக்கோஸ் மற்றும் லிப்பிட்கள் மற்றும் அதிக எடை மற்றும் உடல் பருமன் ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம். CVD களின் அதிக ஆபத்தில் உள்ளவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதிசெய்தால், அகால மரணங்களைத் தடுக்கலாம். கடந்த சில ஆண்டுகளாக, மக்கள் விழிப்புணர்வுடன், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காண்கிறோம் மேலும் ஆபத்தில் உள்ள நபர்களில் லிப்பிட் சுயவிவரங்கள் மேம்படுவதை படிப்படியாகக் காண்கிறோம் என்று கூறினார்.

# பா.ஜ.க தேசிய தலைவர் மீது காங்கிரஸ் கட்சியினர் காவல் நிலையத்தில் புகார்

**திருமங்கலம்.செப்.30.**

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து தவறான கருத்துக்களை தெரிவித்த பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் காங்கிரஸ் கட்சியினர் புகார் அளித்துள்ளனர்.

பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா சிவகங்கையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கடந்த 22 ஆம் தேதி மதுரை வந்தார். மதுரையில் தனியார்விடுதியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பணி 95 சதவீதம் நிறைவு பெற்றது எனக் கூறியதாக கடும் விமர்சனம் எழுந்தது. இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் தகவல் அறியும் உரிமை பிரிவு தலைவர் வழக்குரைஞர் கனகராஜ், தகவல் அறியும் உரிமை சட்டப்பிரிவு பொதுச் செயலர் சக்திவேல் ஆகியோர் ஆஸ்டின்பட்டி காவல் நிலையத்தில் அளித்துள்ள புகார் மனுவில் :மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து தவறான கருத்துக்களை பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.எய்ம்ஸ் மருத்துவமனை குறித்த தகவல்களை மத்திய சுகாதாரத் துறை மற்றும் எய்ம்ஸ் மருத்துவ மனை அதிகாரிகள் தான் தெரிவிக்க வேண்டும். ஆனால் பாஜகவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து தெரிவித்திருப்பது அரசாங்க மாண்பிற்கு எதிரானது. அரசுக்கு குந்தகம் விளைவிப்பதாக கருதப்படுகிறது. எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.இந்த புகார் மனுவை ஆஸ்டின்பட்டி போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை நடைபெற்றுவருகிறது

**சிவகங்கை.செப்.30.**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை (பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகள்) மற்றும் இதர படிப்புகளுக்கான, கல்வியாண்டு 2022-2023க்கான மாணவர் சேர்க்கை 30.06.2022 முதல் நடைபெற்று வருகிறது. சேர்க்கை கல்வித்தகுதி மற்றும் கட்டணம் தொடர்பான விபரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் (றறற.வழெர.யஉ.in) வெளியிடப்பட்டுள்ளது. கல்வி பயில விருப்பமுள்ளவர்கள் தங்கள் வசிப்படத்தின் அருகாமையில் உள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப்பல்கலைக்கழக மண்டல மையங்களில் (விழுப்புரம், தர்மபுரி, கோயம்பத்தூர் , மதுரை, சென்னை, நீலகிரி, திருநெல்வேலி, திருச்சி, சேலம், திருவண்ணாமலை, சிவகங்கை, மயிலாடுதுறை) ஆகியவற்றில் சேர்க்கைக்கான வசதியைப் பெறலாம். மாணவர்களின் நலன் கருதி சேர்க்கையானது வாரத்தின 7 நாட்களிலும் (அரசு விடுமுறை நாட்கள் உட்பட ) நடைபெறும். மேலும் விபரங்களுக்கு 9345913378 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# வேகமாக விற்பனையாகும் ஸ்மார்ட்போன் வரிசையில் ஐக்.யூ.ஓ.ஓ

**சென்னை, செப். 30-**

சிறந்த செயல்திறன்மிக்க பிராண்டாக விளங்கி வரும் ஐக்.யூ.ஓ.ஓ. ஸ்மார்ட்போன் '2022–ம் நிதி ஆண்டின் 2வது காலாண்டில் இந்தியாவின் மிக வேகமாக வளரும் ஸ்மார்ட்போன் பிராண்ட்' என்ற மைல்கல்லை எட்டி சாதனை படைத்துள்ளது. இதன் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி விகிதம் 700 சதவீதமாக உள்ளது என்று 'கவுன்டர்பாயிண்ட் ஸ்மார்ட்போன் மாடல் டிராக்கர் க்யூ2' ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. மேலும் நிதி ஆண்டின் முதல் காலாண்டின் வளர்ச்சி விகிதத்துடன் 2வது காலாண்டை ஒப்பிடுகையில் அதன் வளர்ச்சி விகிதம் 135 சதவீதம் உயர்ந்து இருப்பதாகவும் அந்த ஆய்வு அறிக்கை கூறியுள்ளது. இது குறித்து ஐக்.யூ.ஓ.ஓ. நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி நிபுன் மரியா கூறுகையில், நடப்பு நிதி ஆண்டின் 2வது காலாண்டில் எங்கள் ஸ்மார்ட்போன்களுக்கான தேவை அதிகரித்து இருப்பதன் மூலம் மற்றொரு மைல்கல்லை நாங்கள் எட்டியிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். கடந்த சில ஆண்டுகளாக நாங்கள் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அற்புதமான பயணத்தை மேற்கொண்டு வருகிறோம். எங்களின் பயணம் இதே திசையில் புதிய தேடுதலை நோக்கி இருப்பதோடு, எங்கள் நுகர்வோரின் தேவைகள், அவர்களின் விருப்பங்களை நிறைவேற்ற அவர்களுக்கு சிறந்த ஸ்மார்ட்போன் அனுபவங்களை வழங்குவோம். நாங்கள் அறிமுகம் செய்யவிருக்கும் பல்வேறு சலுகைகள் மூலம் வரும் காலத்தில் இதுபோன்ற பல்வேறு மைல்கல் சாதனைகளை எட்டுவோம் என்று கூறினார்.

## திருமங்கலத்திற்கு வருகை தந்த எடப்பாடியாருக்கு
# அ.தி.மு.க அம்மா பேரவை சார்பில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் எழுச்சிமிகு வரவேற்பு



**திருமங்கலம். செப்.30.**

முன்னாள் முதலமைச்சரும்,கழக இடைக்கால பொதுச் செயலாளருமான எடப்பாடியார் சிவகாசி மற்றும் மதுரையில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்பதற்காக நேற்று மதுரைக்கு வருகை புரிந்தார். இதையடுத்து சென்னையிலிருந்து மதுரைக்கு விமானத்தின் மூலம் வந்தடைந்த எடப்பாடியாருக்கு மதுரை விமான நிலையத்தில் வைத்து முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், ஆர்.பி.உதயகுமார், செல்லூர் கே.ராஜு, கடம்பூர் ராஜு, மாபா.பாண்டியராஜன், சி.விஜயபாஸ்கர், தளவாய் சுந்தரம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வி.வி ராஜன் செல்லப்பா, மற்றும் மாவட்ட கழகச் செயலாளர்கள் செந்தில்நாதன் ,முனியசாமி, மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ராஜ்சத்யன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசன், சரவணன், சதன்பிரபாகர், டாக்டர் பரமசிவம் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து அன்புடன் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து மதுரையிலிருந்து சிவகாசி பொதுக் கூட்டத்திற்கு சென்றிடும் வழியில் திருமங்கலம் பைபாஸ் சாலை வழியே தனது பிரச்சார வாகனத்தில் திருமங்கலம் தொகுதி மேலக்கோட்டை பகுதிக்கு வருகை தந்த எடப்பாடியாருக்கு கழக அம்மா பேரவை சார்பில், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர்ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ., தலைமையில் சாலையின் இருபுறமும் சித்திரை திருவிழா போல் மக்கள் வெள்ளம் போல் திரண்டு வந்து எழுச்சிமிகு வரவேற்பளித்தனர். அப்போது பெண்கள் பூரண கும்ப மரியாதை செலுத்தியும் மலர்களை தூவியும் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். தொடர்ந்து பிரச்சாரம் வாகனத்தில் மேல் எழுந்து நின்ற எடப்பாடியார் இரட்டை விரலை காண்பித்தபடி மக்கள் வெள்ளத்தில் நீந்தி சென்றார். அப்போது வழியெங்கிலும் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பூங்கொத்து, சால்வைகள் கொடுத்து வரவேற்றனர்.அப்போது முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் குடும்பத்தினர் சார்பில் அவரது மகள் உ.பிரியதர்ஷினி, கழக வெற்றிக்கு அடையாளமாக வீரவாள் கொடுத்து மகிழ்வுடன் வரவேற்றார்.மேலும் மீண்டும் தமிழகத்தில் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும் என்ற அடிப்படையில் கழகத் தொண்டர்கள் எடப்பாடியாருக்கு ராஜகிரீடம் அணிவித்து அன்புடன் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து கள்ளிக்குடி ஒன்றியம் சிவரக்கோட்டை பகுதியில் ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்து, விவசாயிகளுக்கு வாழ்வாரம் சிறக்க பல்வேறு திட்டங்களை வழங்கியும், தொடர்ந்து கடந்த அம்மா ஆட்சி காலத்தில் சிப்காட்டுக்கு எதிரான அரசாணை ரத்து செய்து எங்கள் விளைநிலங்களை பாதுகாத்த எடப்பாடியார் வாழ்க என்று கோஷமிட்டு ஒன்றிய கவுன்சிலர் ஆதி (எ) ராஜா தலைமையில் உற்சாக வரவேற்பளித்தனர்.

இதையடுத்து கள்ளிக்குடிக்கு வருகை தந்த எடப்பாடியாருக்கு பிரமாண்ட முறையில் எழுச்சி மீது வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான பொது மக்களும், தொழிலாளர்களும், இளைஞர்களும் ஒன்றிய செயலாளர் உலகாணி மகாலிங்கம் தலைமையில் திரண்டு வந்து மலர்களை தூவியபடி எடப்பாடியார் வாழ்க என்று கோஷமிட்டனர். திருமங்கலம் தொகுதி மக்களின் அன்பான வரவேற்பினை ஏற்றுக் கொண்ட முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அனைவருக்கும் நன்றி தெரிவித்து சிவகாசி பொதுக் கூட்டத்திற்கு கிளம்பிச் சென்றார்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் வக்கீல். அ.தமிழ்ச்செல்வம், பொருளாளர் வக்கீல்.திருப்பதி, மாநில சார்பு அணி நிர்வாகிகள் ராமகிருஷ்ணன், வெற்றிவேல், தன ராஜன், இளங்கோவன், அன்னபூர்ணா தங்கராஜ், சிவசுப்பிரமணி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் தமிழழகன், சரவணபாண்டி, மகளிரணி லட்சுமி, சதீஸ் சண்முகம், ஜஹாங்கீர், ராமகிருஷ்ணன், பாஸ்கரன், மகேந்திர பாண்டி, பால்பாண்டி, ஆண்டிச்சாமி, நகர் கழக செயலாளர்கள் விஜயன், பூமாராஜா , மதுரை புறநகர் மேற்கு மாவட்ட மகளிரணி செயலாளர் பி.லெட்சுமி மற்றும் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட ஒன்றிய கழக, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக் கணக்காக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாநகராட்சி கூட்டம் மேயர் இளமதி தலைமையிலும் துணை மேயர் ராஜப்பா முன்னிலையில் நடைபெற்றது.உடன் மாநகராட்சி ஆணையர் உள்ளார்.

# சிறுகுடியில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மரக்கன்றுகள்



**நத்தம், செப், 30**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்துக் குட்பட்ட சிறுகுடி ஊராட்சியில் நம்ம ஊரு சூப்பர் திட்டத்தின் கீழ் பொது இடங்கள், பள்ளி, ஊராட்சி அலுவலகம், நூலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்குனர் மற்றும் திட்ட இயக்குனர் சரவணன், உதவி திட்ட அலுவலர் தேன்ராஜ், வட்டார இயக்க மேலாளர் விஜயலட்சுமி, கணக்காளர் விஜயலட்சுமி, சமுதாய சுய உதவி குழு பயிற்றுநர் ராதா ஆகியோர் நேரில் பார்வையிட்டு பொது இடங்களில் வளர்ந்துள்ள செடிகளை அகற்றவும், மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் சுத்தம் செய்த தேதியை குறிப்பிடுமாறும், பொது இடங்களில் குப்பைகள் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளையும், ஊராட்சி ஒன்றிய தலைவரையும் அறிவுறுத்தினர். தொடர்ந்து.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இதில் யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன்,

முனியாண்டி, ஊராட்சி மன்ற தலைவர் கோகிலவாணி வீரராகவன், ஊராட்சி செயலர் வீரபாண்டி, பணித்தள பொறுப்பாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாநகராட்சி கூட்டத்திற்கு அதிமுக எதிர்க்கட்சி தலைவர் சி.எஸ்.ராஜ்மோகன் தலைமையிலும், எதிர்கட்சி துணைத்தலைவர் பாஸ்கரன் முன்னிலையிலும், அதிமுக மாமன்ற உறுப்பினர்கள் சத்தியவாணி மோகன், உமாதேவி பாரதிமுருகன் ஆகியோர் பங்கேற்றனர்.



திருவொற்றியூர் பொது வர்த்தகர் சங்கத்தின் 49 ஆம் ஆண்டு விழா சங்க கவுரவத்தலைவர் ஜி.வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அருகில் சங்க நிர்வாகிகள் வே.ராமசாமி, ஆர்.முருகேசன், ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் ரூ.46.66 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சென்னிமலை சென்குமார் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் கட்டிடத்தில் கட்டப்பட்ட காட்சி அறையுடன் கூடிய சில்லறை விற்பனை நிலையம் மற்றும் சரக்கு இருப்பு கிடங்கினை முதலவர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்ததைத் தொடர்ந்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## கொரட்டூர் ஊராட்சியில் மரக்கன்றுகள் நடும் விழா



திருவள்ளூர்,செப்,30.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் கொரட்டூர் ஊராட்சியில் நம்ம ஊரு சூப்பர் மக்கள் இயக்கம் கொரட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் இ.கந்தபாபு தலைமையில்,துணைத் தலைவர் ரம்யா பாண்டியன்,வார்டு உறுப்பினர்களின் முன்னிலை வகித்தனர். நம்ம ஊரு சூப்பர் என்ற நிகழ்ச்சி கொரட்டூர் ஊராட்சிக்கு உட்பட்ட புதுச்சத்திரம் கிராமத்தில் உள்ள துவக்கப்பள்ளி வளாகம் அருகில் அங்கன்வாடி மைய வளாகத்தில் பயனுள்ள மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் தலைமை ஆசிரியர்,மாணவ,மாணவியர், அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுக்கள்,சுகாதார ஊக்குநர், பணித்தள பொறுப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஊராட்சி செயலர் எம். சுரேஷ்குமார் செய்திருந்தார்.



மீஞ்சூர் ஒன்றியத்திற்குட்பட்ட அத்திப்பட்டு முதல் நிலை ஊராட்சியில் அடங்கிய ரெட்டிபாளையம் அரசு துவக்க பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜையை ஒன்றிய குழு பெருந்தலைவர் ரவி துவக்கி வைத்தார். அவருடன் அத்திப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் சுகந்தி வடிவேலு,ஒன்றிய கவுன்சிலர் சங்கீதா அன்பழகன்,வார்டு உறுப்பினர் சங்கர், பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



75 வது சுதந்திர தின அமுதபெருவிழாவினை முன்னிட்டு கோவை ஸ்கால் கிளப் சார்பில் உலக சாதனைக்காக வடிவமைக்கப்பட்ட இந்தியாவில் உள்ள 75 சுற்றுலா தளங்களின் புகைப்படங்கள் அடங்கிய 75 அடி நீளமுள்ள கேக்கினை அமைச்சர் மதிவேந்தன் வெட்டினார். அருகில் கலெக்டர் ஜி.எஸ்.சமீரன், ஒன்றிய அமைச்சகத்தின் சுற்றுலாத்துறை தென் மண்டல இயக்குநர் முகமமு பரூக், மண்டல பாஸ்போர்ட் அலுவலர் பால்ரவீந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



கோடம்ப்பாக்கம் மண்டலம் 136 வது வார்டு பி.டி.ராஜன் சாலையில் நேற்று பெய்த கன மழையினால் பெரிய மரம் விழுந்தது.அதனைமாமன்றஉறுப்பினர்கள்கே.கண்ணன்,து. நிலவரசிதுரைராஜ் ஆகியோர் மாநகராட்சி அதிகாரிகளுடன் சேர்ந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.



சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த ஏ.அருள்ராஜ் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் பஸ் நிலையம் அருகில் ஏழை, எளியோர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் மக்கள் தேசிய விசுவாச கட்சி தமிழ் தேச மக்கள் விழிப்புணர்வு நல சங்கம் மற்றும் கே.ஜி. எம் அறக்கட்டளை நிர்வாகிகள்,உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட ரவுடி உயிரிழப்பு

சென்னை செப் 30-

சென்னையில் போலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட ரவுடி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்த ரவுடி ஆகாஷ். இவர் பெரம்பூரை சேர்ந்த பால கிருஷ்ணமூர்த்தி என்பவரின் கார் கண்ணாடியை அடித்து உடைத்ததாக கூறப்படுகின்றது. இதுகுறித்து, பால கிருஷ்ண மூர்த்தி கொடுத்த புகாரின் பேரில் ஓட்டேரி போலீசார் கடந்த 20-தேதி இரவு ரவுடி ஆகாசை கைது செய்து காவல் நிலையம் அழைத்து சென்றுள்ளனர். பின்னர், 21-தேதி அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி உள்ளனர். இந்த நிலையில், ரவுடி ஆகாஷ் அதிக மதுபோதையில் இருந்தால் போலீஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று முடிவு செய்த போலீசார், கடந்த 21-ம் தேதி இரவு 11 மணிக்கு ஆகாசை அவரின் சகோதரியிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த நிலையில் வீட்டில் இருந்த ஆகாஷ் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து 8 நாட்கள் மருத்துவமனையில் கிசிச்சை பெற்று வந்த ஆகாஷ் இன்று உயிரிழந்து உள்ளார். ஆகாஷி மரணம் தொடர்பாக அவரது உறவினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக விசாரணை நடத்த துறைரீதியாக உத்தரவிட்டுள்ளனர். விசாரணைக்கு பிறகே ஆகாஷின் மரணம் குறித்து உண்மைகள் வெளிவரும் என்று கூறப்படுகின்து. போலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட ரவுடி மருத்துவமனையில் உயிரிழப்பு சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை பள்ளிக்கரணையில் ரவுடி சரமாரி வெட்டிக்கொலை

சென்னை செப் 30-

பள்ளிக்கரணையில் ரவுடி சரமாரி வெட்டிக்கொலை செய்யப்பட்டார். கஞ்சா கும்பலுடன் ஏற்பட்ட மோதலால் கொலை நடந்ததா? என விசாரிக்கின்றனர்.

**கொலை**

சென்னை சென்னையை அடுத்த பள்ளிக்கரணை அம்பேத்கர் குறுக்கு தெருவில் சிலர் ஆயுதங்களுடன் மோதிக் கொள்வதாக பள்ளிக்கரணை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, தாம்பரம் போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உத்தரவின் பேரில், சேலையூர் உதவி கமிஷனர் முருகேசன், பள்ளிக்கரணை போலீஸ் இன்ஸ்பெக்டர் குமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர். அப்போது, பள்ளிக்கரணை அம்பேத்கர் தெருவில் உள்ள புதரில் மேடவாக்கம் புஷ்பா நகரை சேர்ந்த பிரைட் ஆல்வின் (வயது 30) என்பவர் தலை, கை, கால் ஆகிய இடங்களில் வெட்டு காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். மேலும் அங்கு சற்று தொலைவில் ஆல்வினின் நண்பர் பெருமாள் (23) என்பவரும் வெட்டுக்காயங்களுடன் உயிருக்கு போராடியபடி கிடந்ததாக தெரிகிறது.

இந்த நிலையில், போலீசார் ஆம்புலன்சை வரவழைத்ததையடுத்து, மருத்துவ குழுவினர் சோதனை செய்ததில் பிரைட் ஆல்வின் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். போலீசார் நடத்திய விசாரணையில், பள்ளிக்கரணை போலீஸ் நிலையத்தில் பல குற்ற வழக்குகள் ஆல்வின் மீது நிலுவையில் உள்ளதும், அவர் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து, அவரது உடலை போலீசார், பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காயங்களுடன் கிடந்த பெருமாளை மீட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

கஞ்சா விற்பனை செய்வதில் பிரைட் ஆல்வினுக்கும், மணி என்பவருக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால் கஞ்சா விற்பனை தகராறில் கும்பலுடன் ஏற்பட்ட மோதலில் கொலை நடந்ததா? அல்லது வேறு ஏதாவது காரணமா என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வடபழனியில் நள்ளிரவில் லாரி மோதி பெண் பலி: டிரைவர் கைது

சென்னை செப் 30-

வடபழனியில் இருந்து கோயம்பேடு நோக்கி நள்ளிரவு 2 மணி அளவில் கான்கிரிட் கலவை லாரி ஒன்று சென்றது.

100அடி சாலையில் தனியார் ஆஸ்பத்திரி அருகே வந்தபோது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி தறிகெட்டு ஓடி சாலையோரமாக நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவர் மீது மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட பெண் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.தகவல் அறிந்து பாண்டி பஜார் போக்குவரத்து புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் கமலாதேவி மற்றும் போலீசார் விரைந்து வந்து பெண்ணின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.விபத்தில் பலியான பெண் யார்? எந்த பகுதியை சேர்ந்தவர்? என்பது தெரியவில்லை. விபத்து ஏற்படுத்திய லாரி டிரைவரான மேற்கு முகப்பேர் பகுதியை சேர்ந்த ராமமூர்த்தி (வயது 52) என்பவரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.

## கேட்பாரற்று நிறுத்தப்பட்டுள்ளதால் 120 வாகனங்களை போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்க முடிவு

### மெட்ரோ ரெயில் நிறுவனம் நடவடிக்கை

சென்னை செப் 30-

ஆண்டு கணக்கில் கேட்பாரற்று நிறுத்தப்பட்டுள்ளதால் 120 வாகனங்களை போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்க மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவெடுத்துள்ளது. சென்னை

மெட்ரோ ரெயில் நிறுவன கட்டுப்பாட்டில் 41 ரெயில் நிலையங்கள் உள்ளன. இங்கு கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா தொற்று காலக்கட்டத்தில் இருந்து இதுநாள் வரை 120 இரு சக்கரம், 3 சக்கரம் மற்றும் 4 சக்கர வாகனங்களை அதன் உரிமையாளர்கள் எடுத்துச் செல்லாமல் கேட்பாரற்று நிறுத்தி சென்று உள்ளனர். இந்த வாகனங்களை வருகிற அக்டோபர் மாதம் 28-ந்தேதிக்குள் உரிய ஆவணங்களையும், உரிய வாகன நிறுத்து கட்டணத்தையும் செலுத்தி வாகனங்களை எடுத்து செல்லலாம்.

தவறும் பட்சத்தில் அனைத்து வாகனங்களும் அந்தந்தப்பகுதியில் உள்ள போலீஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சென்னையில் அனுமதிக்கு மாறாக கட்டிய 2.75 லட்சம் வீடுகளுக்கு கூடுதல் சொத்து வரி விதிக்க நடவடிக்கை மாமன்ற கூட்டத்தில் முடிவு



சென்னை செப் 30-

சென்னை மாநகராட்சி கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நேற்று நடந்தது. துணை மேயர் மகேஷ் குமார், கமிஷனர் ககன்தீப்சிங் பேடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டம் தொடங்கியதும் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப் பெண் திட்டம் ஆகியவற்றை கொண்டு வந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மேயர் பிரியா நன்றி தெரிவித்தார்.

அதை தொடர்ந்து கேள்வி நேரம் தொடங்கியது. இந்த கூட்டத்தில் 97 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்து வரி மறு சீராய்வு செய்யப்பட்டது. 12.5 லட்சம் சொத்துவரி உரிமையாளர்கள் உள்ளனர். அதில் 6.90 லட்சம் பேர் முதல் அரையாண்டு சொத்துவரி முழுமையாக செலுத்தி உள்ளனர். மீதம் உள்ள 6.25 லட்சம் உரிமையாளர்கள் சொத்து வரி செலுத்த வேண்டும். நடப்பு நிதியாண்டில் 2-ம் அரையாண்டு துவங்க குறுகிய காலமே உள்ளதால் முதல் அரையாண்டு வரியினை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு 2 சதவீதம் தனி வட்டி விதிக்கப்பட்டுள்ளது. சொத்து வரி சீராய்வு தொடர்பான வழக்குகள் சென்னை ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ளதாலும் உயர்த்தப்பட்ட சொத்து வரியினை இன்று (30-ந்தேதி)க்குள் செலுத்த வேண்டி உள்ளதாலும் உரிமையாளர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கிடும் வகையில் அபராதமாக விதிக்கப்பட்ட 2 சதவீதம் தனி வட்டி தளர்வு செய்வது அவசியமாக கருதப்படுகிறது. அதன்படி முதல் அரையாண்டு சொத்துவரி செலுத்தாத உரிமையாளர்களுக்கு மட்டும் சிறப்பு நிகழ்வாக 2 சதவீதம் தனி வட்டியை தளர்வு செய்ய அனுமதிக்கலாம்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட கட்டிடங்கள் டிரோன்மூலம் ஆய்வு செய்யும் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதன்மூலம் அனைத்து சொத்துக்களும் கணக்கெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 3 லட்சத்து 10 ஆயிரத்து 139 மதிப்பிட்டுள்ள கட்டிடங்கள் கண்டறியப்பட்டு மாநகராட்சிக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இதில் 30,897 மாறுபாடுள்ள கட்டிடங்கள் வருவாய் துறை மூலம் அளவீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள2,79,240 மாறுபாடுள்ள கட்டிங்கள் நிவர்த்தி செய்ய வேண்டியது.

தற்போதைய சூழலில் மாநகராட்சி வரி மதிப்பீட்டாளர்கள் மூலம் இந்த பணிகளை மேற்கொண்டால் கால தாமதம் ஆகும். எனவே தனியார் நிறுவனங்கள் மூலம் துல்லியமாக ஆய்வு செய்து பணியை மேற்கொள்ள ரூ.5.94 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களை கொண்டு இந்த பணியை மேற்கொள்ளும்போது மாநகராட்சிக்கு தோராயமாக ரூ.95.95 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடையாறு-காந்தி நகர் கால்வாய் கரை சாலையில் புதிதாக அமைக்கப்பட்டு உள்ள பூங்காவுக்கு கலைஞர் கருணாநிதி பூங்கா என்று பெயர் சூட்ட வேண்டும்.

மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நல மையங்களுக்கு தேவையான 107 டாக்டர்களின் பணி ஒப்பந்த காலம் மேலும் 11 மாதம் நீட்டிக்க அனுமதி அளிக்கப்படும்.நுங்கம்பாக்கம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாநில பள்ளியாக தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அங்குள்ள மாணவர்களை போட்டி தேர்வுக்கு தயார் செய்யும் வகையில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.மேற்கண்ட 97 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட பிரகாசபுரம் பகுதியில் அமைந்துள்ள வளமீட்பு பூங்காவினை பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் இப்ராஹிம் ஷா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுகாதார ஆய்வாளர் கண்ணன் உள்ளார்.

## மெரினா கடற்கரையில் இலவச இணைய வசதி வழங்க மாநகராட்சி திட்டம்

சென்னை செப் 30-

சென்னை, சென்னை மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் 24 மணி நேர இலவச இணைய சேவை வழங்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. மெரினா, பெசன்ட் நகர் கடற்கரைகள் சென்னை வாசிகளின் பிரதான பொழுது போக்கு தளமாக விளங்கி வருகிறது. இந்நிலையில், இந்த கடற்கரைகளில் சுற்றுலா துறையுடன் இணைந்து பொதுமக்களுக்கு இலவச இணையதள சேவை வழங்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. முதல்கட்டமாக மெரினாவில் 5 இடங்களில் இலவச வைபை நிறுவப்படவுள்ளது.

## மதுரவாயல் எரிக்கரை பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை: மாநகராட்சிக்கு 146 வது கவுன்சிலர் கோரிக்கை

சென்னை செப் 30-

சென்னை மாநகராட்சி கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நேற்று நடந்தது. துணை மேயர் மகேஷ் குமார், கமிஷனர் ககன்தீப்சிங் பேடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டம் தொடங்கியதும் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப் பெண் திட்டம் ஆகியவற்றை கொண்டு வந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு 146 வது மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் நன்றி தெரிவித்தார்.அதை தொடர்ந்து கேள்வி நேரம் தொடங்கியது. கேள்வி நேரத்தில் பேசிய 146 வது மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் வளசரவாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட 146 வது வார்டில் மதுரவாயல் ஏரிக்கரையில் பேருந்து நிறுத்தில் பொது மக்கள் பேருந்து ஏறுவதற்கு மழை காலம் இருந்தாலும் சரி வெயில் காலம் இருந்தாலும் சரி பொது மக்கள் மிகவும் சிரம்பட்டு இருந்து வருகின்றனர். ஆகவே பேருந்து நிறுத்ததில் நிழற்குடை அமைத்து தர வேண்டும் . வேண்டுமென்றால் எனது மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பணம் கொடுக்க தயாராக உள்ளேன்மேயர் பிரியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதே போல். 146 வது வார்ட்டில் ஏற்கனவே மழை நீர் வடிகால் அமைக்கும் பணியை விரைந்து முடிக்கவும் , தெருக்களை சுத்தம் செய்ய தூய்மை பணியாளர்கள் குறைவாக இருப்பதாக தெரிவித்தார்.மாமன்ற உறுப்பினர் ஆலப்பாக்கம் சண்முகத்திற்கு பதில் அளித்த மேயர் மாமன்ற உறுப்பினர் கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேருந்து நிறுத்தில் நிற்குடை அமைக்கும் இடத்தை ஆய்வு செய்து கண்டிப்பாக செய்து தரப்படும் என்று மேயர் பிரியா கூறினார்.

BEFORE THE REVENUE DIVISIONAL OFFICER AT COONOOR THE NILGIRIS.
N. Krishnamurthy
-Petitioner
Versus
The Sub Registrar,
Kotagiri,
The Nilgiris.
-Respondent
NOTICE
TO WHOM SO EVER IT MAY CONCERN
Please take Notice that the above named Petitioner has file a Petition on the file of the Revenue Divisional Officer, Coonoor to register the date of death of the Petitioner's mother namely SINGIAMMAL wife of N.S. Nanjan died on 06.10.1964. If anybody having any valid objections please inform the same before Revenue Divisional Officer, Coonoor within 15 days.
N. Krishnamurthy,
S/o. Late N.S. Nanjan,
1/128, Beratty Village,
Wellington Post,
The Nilgiris- 643231

# அத்திக்கடவு- அவிநாசி திட்டத்தின்கீழ் பிரதான குழாய்கள் பதிக்கும் பணி: அமைச்சர் சு.முத்துசாமி நேரில் ஆய்வு



ஈரோடு.செப்.30-

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முள்ளம்பட்டி, புதுப்பாளையம் (நசியனூர்- காஞ்சிகோவில் சாலை) பகுதியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி அத்திக்கடவு- அவிநாசி திட்டத்தின்கீழ் பிரதான குழாய்கள் பதிக்கும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.இந்த ஆய்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 26.8.2022 அன்று ஈரோடு மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க வருகை தந்தபோது, அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, கிரே நகரில் அமைக்கப்பட்டுள்ள எம்மாம்பூண்டி நீர்உந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆய்வின்போது, இப்பணிகளை விரைந்து முடித்திட நீர்வளத்துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.மேலும், அத்திக்கடவு - அவிநாசி திட்டமானது கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 டி.எம்.சி. உபரி நிரை நீரேற்றுமுறையில் நிலத்தடியில் குழாய் பதிப்பின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மொத்தம் 24,468 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 குளம் குட்டைகள் நீர் நிரப்பும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.1652 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர் ரூ.1756.88 கோடி மதிப்பீட்டில் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை மற்றும் பவானி, நல்லக்கவுண்டம்பாளையம், திருவாச்சி, போலநாயக்கன் பாளையம், எம்மாம்பூண்டி, அன்னூர் ஆகிய ஆறு நீர் உந்து நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினை விரைவாக முடித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. மேலும் இன்றைய தினம் (29.09.2022) அத்திக்கடவு-அவிநாசி திட்டம் செயல்படுத்துவதற்காக சிறு, சிறு குறைகள் இருப்பதாக அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவாக நடைபெற உறுதுணையாக இருந்த விவசாயிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார். தொடர்ந்து, நல்லக்கவுண்டன்பாளையம் பகுதியில் நீருற்று நிலையம் அருகில் அணுகுசாலை மற்றும் பிரதான குழாய்கள் பதிக்கும் பணியினையும் மற்றும் காளிங்கராயன்பாளையம் பகுதியில் பிரதான குழாய்கள் பதிக்கும் பணியினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஸ் குமார், அத்திக்கடவு-அவிநாசி திட்ட உதவி செயற்பொறியாளர்கள் சங்கர் ஆனந்த் (பவானி-1), வெங்கடாசலம் (பவானி-2), உதவி பொறியாளர்கள் ஜெயராஜ், பழனிவேல், கார்த்திக் உட்பட விவசாயிகள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

நீலகிரி மாவட்டத்தில்

# மழையினால் சேதமடைந்த சாலைகள்: அமைச்சர்கள் எ.வ.வேலு,கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டனர்

ஊட்டி,செப்.30-

நீலகிரி மாவட்டத்தில், மழையினால் சேதமடைந்த சாலைகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , வனத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூரில் மழையினால் சேதமடைந்த சாலைகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , வனத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இவ் ஆய்வில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் பிரதீப் யாதவ் , கலெக்டர் சா.ப.அம்ரித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் , கூடலூர் - சுல்தான் பத்ரி செல்லும் சாலையில் மண் சரிவு ஏற்பட்டு சீரமைக்கப்பட்ட பகுதியில் புதிய தொழில் நுட்ப முறையை கொண்டு, மண் ஆணிகளை பொருத்த திட்டமிட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். அதனை தொடர்ந்து, தேசிய நெடுஞ்சாலை எண் 67 கி.மீ. 475°10 சாலையில் ஏற்பட்ட விரிசல்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், உதகை கூடலூர் சாலை தலைக்குந்தா பகுதியில் அமைக்கப்பட்ட சாலையின் தடிமன் மற்றும் சமமான நிலையில் சாலை உள்ளதா என்பதனையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைதொடர்ந்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தலைக்குந்தா பகுதியில் மரக்கன்றுகளை நடவு செய்தார்.

இவ் ஆய்வின் போது, தலைமைப் பொறியாளர்கள் பாலமுருகன் (தேசிய நெடுஞ்சாலை), சந்திரசேகரன் (நெடுஞ்சாலை), கண்காணிப்பு பொறியாளர்கள் சரவணன், கண்ணன், கோட்டப் பொறியாளர்கள் செல்வம் (தேசிய நெடுஞ்சாலை), குழந்தைராஜ், (நெடுஞ்சாலை), கூடலூர் நகர்மன்ற தலைவர் பரிமளா, முன்னாள் அரசு கொரடா முபாரக், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திராவிடமணி, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் சரவணக்கண்ணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# அமைச்சர் முத்துசாமியிடம் ஜவுளி வியாபாரிகள் மனு

ஈரோடு செப்.30

ஈரோடு கனிமார்க்கெட் தியாகி குமரன் அனைத்து ஜவுளி வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் அமைச்சர் முத்துசாமியிடம் ஒரு மனு கொடுக்கப்பட்டது.



அதில் நாங்கள் நேதாஜி குமரன் கனி மார்க்கெட் பகுதியில் 35 ஆண்டுகளாக ஜவுளி வியாபாரம் செய்து வருகிறோம். இங்கு 250 கடைகள் உள்ளன. எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் எங்களுக்கு முன்னுரிமை கொடுத்து புதிதாக கட்ட ப்பட்டு ள்ள கனி மார்க்கெட் ஜவுளி சந்தையில் கடைகள் ஒதுக்கி கொடுக்கும்படி கேட்டுக் கொள் கி றோம்.இவ் வாறு அதில் கூறப்பட்டுள்ளது சங்க தலைவர் மூர்த்தி செயலாளர் சீனிவாசன் பொருளாளர் பாஸ்கர் துணைத் தலைவர் அமானுல்லா மற்றும் ஏராளமான ஜவுளி வியாபாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

# சென்னிமலை பேரூராட்சிப்பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம்

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது

ஈரோடு,செப்.30-

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் சென்னிமலை பேரூராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி இஆப., மற்றும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி ஆகியோர் முன்னிலையில், செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் சென்னிமலை பேரூராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பு செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, (காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட) சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பசுவப்பட்டி, எக்கட்டாம்பாளையம், எல்லைகிராமம், கொடுமணல், குப்பிச்சிபாளையம், முகாசிபிடாரியூர், முருங்கத்தொழுவு, ஒட்டப்பாறை, புதுப்பாளையம் மற்றும் புஞ்சைப்பாலத்தொழுவு ஆகிய 10 கிராம ஊராட்சிகள் மற்றும் சென்னிமலை பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்காக துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், வடிகால் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி, நியாய விலைக்கடை, சமுதாயக்கூடம், பேருந்து மற்றும் நிழற்குடை வசதி, விளையாட்டு திடல் வசதி, பொதுக்கோரிக்கைகள், கோவில் திருப்பணி, மயான வசதி உள்ளிட்ட பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.இக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துகள் தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சரிசெய்ய கூடிய கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூடுதல் நிதியை பெற்று வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குடிநீர் தேவைக்கு உடனடி தீர்வு காணப்படும். மேலும் தடையில்லா மின்சாரம் வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள் ளப் பட் டுள் ளது. மேலும் பொதுமக்களின் குடிநீர் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் புதிய குடிநீர் திட்டப்பணிகளும் துவங்கப்படவுள்ளது. இன்று அனைத்து துறைகளின் சார்பில் தெரிவிக்கப்பட்ட மக்கள் நல திட்டங்கள் குறித்த கருத்துகளை உடனடியாக செயல்படுத்தும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும். மேலும் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்கள் எவ்வித தங்கு தடையுமின்றி மக்களை சென்றடையும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனவே, அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு முழுமையாக கொண்டு சேர்க்கும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.அகல்வாராய்ச்சியை பொருத்த வரை தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு தனிகவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கொடுமணல் அகல்வாராய்ச்சியில் கிடைத்துள்ள பொருட்களை பொதுமக்களின் பார்வைக்கு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவிக்கும் வகையில், மணிமண்டபங்கள், நினைவு இல்லங்கள், அரங்கங்கள் அமைக்கப்பட்டு அரசின் சார்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் சுதந்திர போராட்ட தியாகிகள், மொழிப்போர் தியாகிகள் ஆகியோரின் புகைப்படங்கள் பொதுமக்கள் மற்றும் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கொடிகாத்த குமரன் பிறந்த இல்லம் அரசின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் கொடிகாத்த குமரன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டு, திருவுருவச் சிலை அமைக் கப் பட் டுள் ளது. சென்னிமலையில் கொடிகாத்த குமரன் அவர்களுக்கு அரங்கம் அமைப்பது குறித்து இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. உரிய இடம் தேர்வு செய்தவுடன் அரங்கம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சந்தோஷினி சந்திரா, ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் லி.மதுபாலன் இஆப., மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எஸ். ஆர்.எஸ்.செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) (பொ) குமரன், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, சென்னிமலை பேரூராட்சித் தலைவர் ஸ்ரீதேவி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) (பொ) கணேசன், சென்னிமலை பேரூராட்சி செயல் அலுவலர் அ.ஆயிஷா, ஊராட்சி மன்ற தலைவர்கள் உட்பட அனைத்து துறை உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# சட்டமன்றப்பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழு கூட்டம்: தலைவர் இரா.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது

ஊட்டி,செப்.30-

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழு 2021-2023 கூட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழு தலைவர் இரா.ராஜேந்திரன் சேலம் (வடக்கு) தொகுதி தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை குறிப்பாணைகள் மீதான ஆய்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் க.அசோகன், (சிவகாசி தொகுதி), மா.செந்தில்குமார் (கள்ளக்குறிச்சி தொகுதி) எஸ். சேகர், (பரமத்திவேலூர் தொகுதி), இ.பரந்தாமன், (எழும்பூர் தொகுதி), ஓ. ஜோதி (செய்யாறு தொகுதி) மற்றும் சட்டமன்றப் பேரவையின் துணைச் செயலாளர், சட்டத்துறை துணைச் செயலாளர், துறை சார்ந்த அதிகாரிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெயராமன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு வழியாக

# கோவை-தூத்துக்குடி ரயிலை இயக்க வேண்டும்: காங்கிரஸ் கட்சி கோரிக்கை

ஈரோடு, செப்.30

தெற்கு ரெயில்வே பொது மேலாளருக்கு ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் சிறுபான்மை பிரிவு துணைத்தலை வர் கே.என்.பாஷா அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறி இருப்பதாவது:

ஈரோடு வழியாககோவையில் இருந்து நாகர்கோவில் எக்ஸ் பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த செயிலுடன் கோவை-தூத்துக்குடி இணைப்பு ரெயில் இயங்கி வந்தது. இந்த கோவை-தூத்துக்குடி இணைப்பு ரெயில் நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதனால் ஈரோட்டில் இருந்து தூத்துக்குடி செல் லும் பயணிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நேரத்தில் தூத்துக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து கோவை, திருப்பூர், ஈரோட்டில் வசித்து வரும் பொதுமக்கள் தங்கள் சொந்த ஊருக்கு சென்று வரும் வகையில் தூத்துக்குடி இணைப்பு சே எக்ஸ்பிரஸ் ரெயிலை மீண்டும் இயக்க வேண்டும்.ஈரோட்டில் மழை பெய்தால், ஈரோடு ரெயில் நிலையத்தின் விசாரணை அலுவலகம், பயணச்சீட்டு முன்பதிவு அலுவலக பகுதிகளில் மழை நீர் தேங்கும் அவலநிலை உள்ளது. எனவே பயணிகள் நலன் கருதி, மழை நீர் உள்ளே செல்லாதவாறு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும். தினசரி 50 ஆயிரம் பேர் வந்து செல்லும் ஈரோடு ரெயில்நிலைய மணிக்கூண்டில் வைக்கப்பட்டு உள்ள கடிகாரம் ஒரு ஆண்டுக்கும் மேலாக கிற இயங்காமல் இருக்கிறது. எனவே அந்த கடிகாரத்தை இயக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த கோரிக்கை மனுவில் அவர் கூறி உள்ளார்.

# ஊட்டியில் அடுத்தடுத்த வீடுகளில் பணம், நகை கொள்ளை: போலீசார் விசாரணை

ஊட்டி, செப்.30-

பர்ன்ஹில் பகுதியில் அடுத்தடுத்த வீடுகளில் ரூ.1 லட்சம் பணம் மற்றும் 8 பவுன் நகை திருடு போய் உள்ளது. இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர் நாச்சிமுத்து. பொறியாளர். இவர் தற்போது வீட்டில் இருந்து பணியாற்றி வருகிறார். இவர் தன்னுடைய மகனை நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள ஒரு பிரபல தனியார் பள்ளியில் படிக்க வைப்பதற்காக பர்ன்ஹில் பகுதியில் வீடு எடுத்து குடும்பத்துடன் தங்கி இருக்கிறார்.

இந்த நிலையில் கடந்த 19-ந் தேதி நாச்சிமுத்து வீட்டின் அருகில் இருந்த ஒரு வீட்டில் ரூ.1 லட்சம் பணம் திருடு போனது. இதனால் பதறிப்போன நாச்சிமுத்து சோதனை செய்து பார்த்தார். அப்போது வீட்டில் இருந்த 8 பவுன் நகை மாயமாகி இருந்தது.இதுகுறித்து ஊட்டி மத்திய போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் இன்ஸ்பெக்டர் மணிக்குமார் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று காலை நாச்சிமுத்துவின் மனைவி வீட்டின் முன்பு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது வீட்டில் முன்பு ஒரு பார்சல் கிடந்தது. அதை திறந்து பார்த்த போது அதில் 3 பவுன் நகை மட்டும் இருந்தது.

போலீசார் பெர்ன்ஹில் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தி வந்ததால், போலீசில் சிக்கிக் கொள்வோம் என்று பயந்த திருட்டு ஆசாமி, வீட்டின் முன்பு வந்து நகையை போட்டு விட்டு சென்றிருக்கலாம் என்று தெரிகிறது.

இதனால் இந்த திருட்டு சம்பவத்தில் அறிமுகமான நபர்கள் ஈடுபட்டு இருக்கலாம் என்று போலீசார் தெரிவித்தனர்.

## முதுகு பகுதியில் காயம்:
# டி-20 உலக கோப்பையில் இருந்து பும்ரா விலகல்

**புதுடெல்லி, செப். 30-**



இந்திய அணி வீரர் ஜஸ்பிரித் பும்ரா காயம் காரணமாக வரும் டி-20 உலகக் கோப்பை போட்டியில் இருந்து விலகியதாக தகவல் வெளியாகி உள்ளது. முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக 4 முதல் 6 மாதங்கள் வரை பும்ரா விளையாட முடியாது என தகவல் வெளியாகி உள்ளது.

**பவுலிங் மோசம்...**

இந்திய அணி தற்போது தென் ஆப்பிரிக்க அணியுடனான 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது. திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முதல் டி20 போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணியின் பவுலிங் மோசமாக இருப்பதாக சமீப காலமாக பல்வேறு விமர்சனங்கள் எழுந்த நிலையில், நேற்றைய போட்டியில் அதற்கு பதிலடி கொடுக்கப்பட்டது. ஏனென்றால் தென் ஆப்பிரிக்க அணியிடம் 106 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்தனர்.

**ரசிகர்கள் ஏமாற்றம்...**

என்ன தான் இந்திய அணி சிறப்பாக பந்துவீசிய போதும், ஜஸ்பிரித் பும்ரா விளையாடாதது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கியது. இந்த சூழ்நிலையில், அதாவது வரும் அக்டோபர் 6ம் தேதியன்று டி20 உலககக்கோப்பை தொடருக்காக இந்திய அணி ஆஸ்திரேலியா புறப்படுகிறது. இந்த சமயத்தில் பும்ரா விவகாரத்தில் டி20 உலககோப்பையில் பங்கேற்பாரா என ரசிகர்கள் மத்தியில் கேள்வி எழுந்தது.

**காயம் காரணமாக...**

இந்த நிலையில், டி-20 உலகக்கோப்பை தொடரில் இருந்து காயம் காரணமாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா விலகியதாக தகவல் வெளியாகியிருக்கிறது. முதுகு வலி காரணமாக அவதிப்பட்டு வரும் பும்ரா, டி20 உலககோப்பை தொடரில் இருந்து விலகி உள்ளது கிரிக்கெட் ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை 60 சர்வதேச டி20 போட்டிகளில் விளையாடி உள்ள பும்ரா, 70 விக்கெட்டுகள் கைப்பற்றி உள்ளார்.

## குஜராத் மாநிலம் அகமதாபாத்தில்
# தேசிய விளையாட்டு போட்டியை துவக்கி வைத்தார் பிரதமர் மோடி

**அகமதாபாத், செப். 30-**



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் 36-வது தேசிய விளையாட்டு போட்டியினை நேற்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

**2 ஆண்டுக்கு முறை...**

இந்தியாவில் கவுரவமிக்க போட்டிகளில் ஒன்றான தேசிய விளையாட்டு 1924-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. முதலில் 2 ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்ட இந்த போட்டி பின்னர் நடைமுறை சிக்கல் காரணமாக சில சமயங்களில் குறிப்பிட்ட காலத்துக்குள் நடைபெறவில்லை.

**ஆறு நகரங்களில்....**

கடைசியாக 35-வது தேசிய விளையாட்டு 2015-ம் ஆண்டு கேரளாவில் நடைபெற்றது. பின்னர் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த தொடர் தள்ளிவைக்கப்பட்டு இருந்தது. இதை தொடர்ந்து 36-வது தேசிய விளையாட்டு போட்டி குஜராத்தில் உள்ள அகமதாபாத், காந்தி நகர், சூரத், வதோதரா, ராஜ்கோட், பவநகர் ஆகிய 6 நகரங்களில் நேற்று முதல் அக்டோபர் 12-ந் தேதி வரை நடைபெற உள்ளது.

**7 ஆயிரம் வீரர்கள்...**

இதில் நீச்சல், தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, ஆக்கி, கைப்பந்து உள்பட 36 விளையாட்டுகளில் இருபாலருக்கும் போட்டிகள் நடத்தப்படுகிறது.

கோகோ, யோகா, மல்லர் கம்பம் ஆகியவை அறிமுக போட்டியாக இடம் பெறுகின்றன. 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள், சர்வீசஸ் ஆகியவற்றை சேர்ந்த சுமார் 7 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் போட்டியில் பங்கேற்கிறார்கள்.

**36-வது போட்டி...**

இந்த நிலையில் இரு நாள் பயணமாக குஜராத் வந்துள்ள பிரதமர் மோடி அகமதாபாத்தில் 36-வது தேசிய விளையாட்டு போட்டியினை நேற்று தொடங்கி வைத்தார். அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற துவக்க விழாவில் குஜராத் முதல் மந்திரி பூபேந்திரா பட்டேல் உள்ளிட்ட மாநில அமைச்சகம், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

இவர்களை தவிர தொடக்க விழாவில் ஒலிம்பிக் வீராங்கனைகள் பிவி சிந்து, நீரஜ் சோப்ரா, ரவிக்குமார் தஹியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## முதல் டி-20 கிரிக்கெட் போட்டி:
# தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தியது இந்தியா

**திருவனந்தபுரம், செப். 30-**



முதல் டி20 கிரிக்கெட் போட்டியில் தென் ஆப்பிரிக்காவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது இந்தியா.

**பந்துவீச்சு தேர்வு...**

இந்தியா-தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணிகள் இடையிலான முதலாவது 20 ஓவர் போட்டி கேரளா தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள கிரீன்பீல்டு சர்வதேச ஸ்டேடியத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா பந்துவீச்சை தேர்வு செய்தார். முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி, இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்தது. 9 ரன்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய தென் ஆப்பிரிக்கா பின்னர் ஒரு வழியாக 100 ரன்னை கடந்தது. 20 ஓவர் முடிவில 8 விக்கெட் இழப்பிற்கு 106 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக கேசவ் மகராஜ் 41 ரன்கள் சேர்த்தார்.

**107 ரன்கள் இலக்கு...**

இந்தியா தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். தீபக் சாகர், ஹர்ஷல் பட்டேல் தலா 2 விக்கெட் எடுத்தனர். இதையடுத்து 107 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். விராட் கோலி 3 ரன்னில் நடையை கட்டினார்.

அதன்பின்னர் கே.எல்.ராகுல், சூரியகுமார் யாதவ் இருவரும், கடைசி வரை நிலைத்து நின்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர். சூரியகுமார் யாதவ் ஆட்டமிழக்காமல் 50 ரன்களும், கே.எல்.ராகுல் 51 ரன்களும் சேர்க்க, இந்தியா 20 பந்துகள் மீதமிருந்த நிலையில் இலக்கை எட்டியது. 2 விக்கெட் இழப்பிற்கு 110 ரன்கள் சேர்த்ததால் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டி கொண்ட தொடரில் இந்தியா 1-0 என முன்னிலையில் உள்ளது.

## விக்கெட் வீழ்த்தியதால் வெற்றி

வெற்றி குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேப்டன் ரோகித் சர்மா கூறியுள்ளதாவது., தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டி20 போட்டியில், ஆரம்பம் முதலே வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் மற்றும் தீபக் சாகர் விக்கெட்களை எடுக்க ஆரம்பித்து விட்டனர். பவர்பிளேயின் போது ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியது இந்திய அணிக்கு சாதகமாக மாற்றியது. விக்கெட் கடினமாக இருந்தது.

இதுபோன்ற விளையாட்டை விளையாடுவதில் நீங்கள் நிறைய கற்றுக் கொள்கிறீர்கள். ஆடுகளம் 20 ஓவர்களுக்கும் உதவியதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உதவியாக ஆடுகளம் இருக்கும் போது எப்படி பந்து வீச வேண்டும் என்பதற்கு இந்த போட்டி சரியான காட்சியாக இருந்தது.

# 'லார்ட்ஸ் பால்கனியை' திறந்து வைத்த கங்குலி



இங்கிலாந்துக்கு எதிராக 2002-ம் ஆண்டு லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற நாட்வெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இறுதி போட்டியில் இந்தியா 326 ரன்கள் இலக்கை துரத்தியது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற அந்த போட்டியில் இந்திய அணி திரில் வெற்றி பெற்றது. இந்திய அணி வெற்றி ரன்களை அடித்த போது அப்போதைய கேப்டன் சவுரவ் கங்குலி லார்ட்ஸ் மைதானத்தின் பால்கனியில் நின்றபடி தனது ஜெர்சியை கழற்றி சுழற்றியது கிரிக்கெட் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வாகும்.

இந்த நிலையில் தற்போது கங்குலியின் சொந்த ஊரான கொல்கத்தாவில் துர்கா பூஜையையொட்டி அங்குள்ள மண்டபத்தில் லார்ட்ஸ் மைதான பெவிலியன் மாதிரியை வடிவமைத்துள்ளனர். இந்த பெவிலியன் மாதிரியை கங்குலி நேற்று திறந்து வைத்தார். பொது மக்கள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், கங்குலி இந்திய கொடியை அசைத்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

# இணையத்தில் வைரலாகும் சுரேஷ் ரெய்னாவின் கேட்ச்



சாலை பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச கிரிகெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் விளையாடி வருகிறார்கள். இந்த தொடருக்கான அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா லெஜண்ட்ஸ் அணி நேற்று ஆஸ்திரேலியா லெஜண்ட்ஸ் அணியை எதிர்கொண்டது. ராய்பூரில் நடந்த இந்த போட்டியில் முன்னாள் இந்திய வீரரும், முன்னாள் சிஎஸ்கே வீரருமான சுரேஷ் ரெய்னா அற்புதமாக பிடித்த ஒரு கேட்ச் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

இந்த போட்டியில் முதலில் டாஸ் வென்ற இந்திய லெஜண்ட்ஸ் அணி ஆஸ்திரேலிய அணியை பேட்டிங் விளையாட அழைத்தது. அதிரடியாக விளையாடி கொண்டிருந்த பென் டன்க் 25 பந்துகளில் 46 ரன்கள் எடுத்திருந்தார். அபிமன்யு மிதுன் வீசிய 16 ஓவரில் பென் டன்க் ஸ்கொயர் லெக் திசையில் அடிக்க முயன்றார். அப்போது பாய்ண்டில் நின்றிருந்த சுரேஷ் ரெய்னா அதை அற்புதமாக பிடித்தார். அந்த கேட்ச்-யின் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# டோனியின் சாதனையை தகர்த்து புதிய வரலாறு படைத்த ரோகித்



தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான முதல் டி20 போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ரோகித் சர்மா இந்திய அணியின் முன்னாள் கேப்டன் எம்எஸ் டோனியின் சாதனையை முறியடித்து புதிய வரலாறு படைத்துள்ளார். இந்திய கேப்டனாக ஒரு ஆண்டில் அதிக டி20 வெற்றிகளை பெற்றவர் என்ற சாதனையை ரோகித் சர்மா சொந்தமாக்கியுள்ளார்.

ரோகித் சர்மா தலைமையின் கீழ் இந்தியா இந்த ஆண்டு இதுவரை 21 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் இந்திய அணி 16 போட்டிகளில் வென்றுள்ளது. இதற்கு முன், 2016ல் இந்திய கேப்டனாக எம்.எஸ் டோனி 15 டி20 வெற்றிகளை பெற்று இருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அந்த சாதனையை ரோகித் சர்மா முறியடித்துள்ளார்.

# டி20 கிரிக்கெட் தரவரிசை: சூர்யகுமார் முன்னேற்றம்



20 ஓவர் கிரிக்கெட் போட்டி வீரர்களின் புதிய தரவரிசைபட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வெளியிட்டது. இதில் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் முகமது ரிஸ்வான் (861 புள்ளி) 'நம்பர் ஒன்' இடத்தில் நீடிக்கிறார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி 20 ஓவர் போட்டியில் 69 ரன்கள் விளாசிய இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் (801 புள்ளி) ஒரு இடம் முன்னேறி மீண்டும் 2-வது இடத்தை பிடித்துள்ளார்.

பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் (799 புள்ளி) 3-வது இடத்தில் உள்ளார். இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா ஒரு இடம் உயர்ந்து 13-வது இடத்தையும், விராட் கோலி 15-வது இடத்தையும், லோகேஷ் ராகுல் 4 இடம் சறுக்கி 22-வது இடத்தையும் பெற்றுள்ளனர். பந்து வீச்சாளர் தரவரிசையில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் (737 புள்ளி) முதலிடத்திலும், தென்ஆப்பிரிக்காவின் தப்ரைஸ் ஷம்சி (716 புள்ளி) 2-வது இடத்திலும் தொடருகிறார்கள். இந்திய தரப்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர் குமார் 10-வது இடம் வகிக்கிறார்.

## இந்தியாவில் தொடர்ந்து 3-வது நாளாக
# 4 ஆயிரத்துக்கு கீழ் குறைந்த தினசரி கொரோனா பாதிப்பு

**புதுடெல்லி, செப். 30-**

இந்தியாவில் தொடர்ந்து 3-வது நாளாக கொரோனா தினசரி பாதிப்பு 4 ஆயிரத்துக்கு கீழே பதிவானது. இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 4,272 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை கொரோனா தொற்று 4 கோடியே 45 லட்சத்து 83 ஆயிரத்து 360 பேரை பாதித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த 4,474 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். 40,750 பேர் சிகிச்சையில் உள்ளனர். இதுவரையில் 4 கோடியே 40 லட்சத்து13 ஆயிரத்து 999 பேர் கொரோனாவில் இருந்து குணம் அடைந்துள்ளனர். நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் 22 பேர் பலியாகினர். நேற்று இந்த எண்ணிக்கை சற்று அதிகரித்து 27ஆக அதிகரித்தது. இதுவரை இந்த தொற்றால் பலியானோர் எண்ணிக்கை 5 லட்சத்து 28 ஆயிரத்து 611 ஆக உயர்ந்தது.

நாடு முழுவதும் தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களின் எண்ணிக்கை 21 கோடி 81 லட்சம் ஆகும் நேற்று ஒரே நாளில் 21,63,248 பேர் தடுப்பூசி செலுத்திக்கொண்டனர். இந்த புள்ளி விவரங்களை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

# குரூப்-2 தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியீடு
## டி.என்.பி.எஸ்.சி அறிவிப்பு

**சென்னை, செப். 30-**

குரூப்-2 தேர்வு முடிவுகள் அக்டோபர் மாதம் வெளியிடப்படும் என டி.என்.பி.எஸ்.சி அறிவித்துள்ளது.

குரூப்-2 மற்றும் 2ஏ பதவிகளில் உள்ள 5,529 காலி பணியிடங்களுக்கான ஒருங்கிணைந்த சிவில் சர்வீசஸ் தேர்வு கடந்த மே 21-ம் தேதி நடைபெற்றது. இந்த தேர்வை தமிழகம் முழுவதிலும் இருந்து 9 லட்சத்து 94 ஆயிரத்து 890 பேர் எழுதினர்.

இதே போல், 397 கிராம நிர்வாக அலுவலர், 2 ஆயிரத்து 792 இளநிலை உதவியாளர், 34 வரித்தண்டலர், 509 நில அளவையர், 74 வரைவாளர், 1,901 தட்டச்சர், 784 சுருக்கெழுத்து தட்டச்சர் உள்பட டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 பதவிகளில் உள்ள 7 ஆயிரத்து 301 பணியிடங்களுக்கான தேர்வு கடந்த ஜீலை மாதம் 24-ம் தேதி நடைபெற்றது.

குரூப் 2 தேர்வு முடிவுகள் கடந்த ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டு, முதன்மை எழுத்துத்தேர்வு செப்டம்பர் மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தேர்வு முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில், குரூப்-2 தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் (அக்டோபர்) வெளியாகும் எனவும், குரூப்-4 தேர்வு முடிவுகள் டிசம்பர் மாதம் வெளியாகும் என டி.என்.பி.எஸ்.சி அறிவித்துள்ளது.

# முதல்வர் ஸ்டாலின் கனிவாகவும் இருப்பார்; இரும்பாகவும் இருப்பார்
## ஆர்.எஸ்.எஸ். விவகாரத்தில் சேகர்பாபு பதில்

**சென்னை, செப். 30-**

உண்மையான திராவிட மாடலுக்காக தமிழக முதல்வர் ஸ்டாலின் எல்லா வகையிலும் கனிவாகவும் இருப்பார், இரும்பாகவும் இருப்பார்'' என்று அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "எங்களைப் பொறுத்தவரை திராவிட மாடல் என்பதை நாங்கள் தினம் தினம் நிரூபித்துக் கொணடிருக்கிறோம்.

வட மாநிலங்களில்தான் கேள்விபட்டிருப்பீர்கள், 50 கோடி 100 கோடிகளில் திருப்பணிகள் என்று, ஆனால் தமிழகத்தில் முதன்முதலில் முதல்வர், எந்தக் காலத்துக்கும் இல்லாத அளவுக்கு திருச்செந்தூருக்கு மேம்படுத்தப்பட்ட திருப்பணிகளுக்காக ரூ.300 கோடி செலவில், அத்திருக்கோயிலின் திருப்பணிகளை தொடங்கி வைத்துள்ளார். இதுதான் திராவிட மாடல்.

கலகத்தை உண்டாக்குவது, பிரச்சினைகளை உண்டாக்குவது, இனத்தால், மதத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்துவது அல்ல திராவிட மாடல். உண்மையான திராவிட மாடலுக்காக தமிழக முதல்வர் எல்லா வகையிலும் கனிவாகவும் இருப்பார், இரும்பாகவும் இருப்பார்'' என்று அவர் கூறியுள்ளார்.

## கூட்ட நெரிசலை சமாளிக்க
# சென்னையில் இருந்து இன்று 2050 சிறப்பு பஸ்கள் இயக்கம்

**சென்னை, செப். 30-**

கூட்ட நெரிசலை சமாளிக்க சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு இன்று 2050 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. தினசரி இயக்கப்படும் 2100 பஸ்களோடு கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்படுவதால் பொதுமக்கள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய முடியும்.

காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அதனை தொடர்ந்து 4, 5 ஆகிய தேதிகளில் ஆயுத பூஜை, மற்றும் விஜயதசமி பண்டிகை கொண்டாடப்படுகிறது. 1-ம் தேதி (சனிக்கிழமை) அரசு விடுமுறை நாளாகும்.

4 நாட்கள் தொடர் விடுமுறை வருகிற நிலையில் அக்டோபர் 3-ந்தேதி மட்டும் வேலை நாளாக உள்ளது. அன்று ஒரு நாள் விடுப்பு அனுமதிக்கப்பட்டால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு 5 நாட்கள் தொடர் விடுமுறை கிடைக்கிறது. மேலும் 1-ந்தேதி முதல் 10-ந்தேதி வரை அரசு பள்ளி மாணவர்களுக்கு காலாண்டு விடுமுறையும் விடப்பட்டுள்ளது. அனைத்து கல்லூரிகளும் விடுமுறை அளித்துள்ளது.

இதனால் வெளியூர் பயணம் அதிகரிக்கும் என்பதால் அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் விடப்படும் என்று அமைச்சர் சிவசங்கர் அறிவித்தார். 30 மற்றும் 1-ம் தேதி ஆகிய 2 நாட்கள் சென்னையில் இருந்து 2050 சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தினசரி இயக்கப்படும் 2100 பஸ்களோடு கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்கப்படுவதால் பொது மக்கள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய முடியும்.

கோயம்பேடு, தாம்பரம் மெப்ஸ், பூந்தமல்லி பைபாசில் உள்ள பணிமனை ஆகிய 3 இடங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. பொதுமக்கள் நெரிசல் இல்லாமல் பயணிக்க முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்று (வெள்ளிக்கிழமை) மாலையில் இருந்து வெளியூர் செல்லக்கூடியவர்கள் பயணத்தை தொடங்குவதால் பல்வேறு போக்குவரத்து கழகங்களை சேர்ந்த பஸ்கள் சென்னையில் இருந்து கூடுதலாக இயக்கப்படுகிறது.

"நெல்லை, தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவனந்தபுரம், தென்காசி, கன்னியாகுமரி, மதுரை போன்ற தென் மாவட்ட பகுதிகளுக்கு கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் புறப்படுகிறது. இதுகுறித்து போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறும்போது, வழக்கமாக இயக்கப்படும் பஸ்களுடன் சிறப்பு பஸ்கள் 2050 சேர்ந்து மொத்தம் 4150 பஸ்கள் இயக்க திட்டமிட்டு உள்ளோம். பொதுமக்களின் தேவையை கருதி கூடுதலாகவும் இயக்க தயாராக உள்ளோம். கூட்ட நெரிசல் இல்லாமல் பயணிக்க பகுதி வாரியாக பிரித்து பஸ்கள் இயக்கப்படுகிறது. மழை பெய்யாவிட்டால் கூட்டம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால், தற்போது பல இடங்களில் மழை பெய்து வருவது வெளியூர் பயணத்தை முடக்கவும் வாய்ப்பு உள்ளது என்றனர்.

## போராட்டத்தின் போது பொதுச்சொத்துக்கள் சேதம்:
# பி.எப்.ஐ. ரூ.5.20 கோடி டெபாசிட் செய்ய கேரள ஐகோர்ட் உத்தரவு

**கொச்சி, செப். 30-**




முழுஅடைப்பு போராட்டத்தின் போது பொதுச்சொத்துகளை சேதப்படுத்தியதற்காக பி.எப்.ஐ. அமைப்பினர் ரூ.5.20 கோடியை டெபாசிட் செய்ய கேரள ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பினரின் இடங்களில் தேசிய புலனாய்வுத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதை கண்டித்து கடந்த 23-ந் தேதி கேரளாவில் அந்த அமைப்பினர் முழு அடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பல இடங்களில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன. மேலும், போராட்டத்தின் போது பொது சொத்துக்களை சேதப்படுத்தப்பட்டதாக புகார் எழுந்தது.

மாநிலத்தில் முழு அடைப்புக்கு தடை விதித்து இருக்கும் நிலையில், இந்த போராட்டத்தை வழக்காக பதிவு செய்து ஐகோர்ட் விசாரித்தது. அப்போது பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் போராட்டம் சட்ட விரோதமானது எனவும், அரசியல்சாசனத்துக்கு எதிரானது எனவும் கண்டனம் தெரிவித்தது. வேலை நிறுத்தம் நடத்துவதற்கு 7 நாட்களுக்கு முன்கூட்டியே நோட்டீஸ் வழங்க வேண்டும் என்ற உத்தரவை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், அதை மீறிய பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தரவிட்டனர். இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு மாநில பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா பொதுச்செயலாளர் மற்றும் மாநிலக்குழுவே பொறுப்பு என குறிப்பிட்ட நீதிபதிகள், போராட்டத்தில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுமாறும், தேவைப்பட்டால் இந்த விவகாரத்தில் வழக்கு பதிவு செய்யுமாறும் போலீசாருக்கு உத்தரவிட்டனர்.

இந்த நிலையில், கேரளாவில் மாநில அரசு பேருந்துகளை சேதப்படுத்தியதற்காக ரூ. 5.20 கோடியை பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு டெபாசிட் செய்ய வேண்டும் என கேரள மாநில ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பி.எப்.ஐ. அமைப்பின் பொதுச்செயலாளராக இருந்தவர் 2 வாரங்களில் பணத்தை டெபாசிட் செய்ய ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சிறப்பு திட்ட செயலாக்கத்துறை சார்பில் சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வு திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள 30 இளம் வல்லுநர்களுக்கு 30 நாட்களுக்கு வகுப்பறை பயிற்சியுடன ´கூடிய இரண்டாண்டு புத்தாய்வுத் திட்டத்தினை தொடங்கி வைத்து, இளம் வல்லுநர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். உடன் அமைச்சர் பழனிவேல்தியாகராஜன், தலைமைச் செயலாளர் இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர், புறநகர் கிழக்கு, மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் பழங்காநத்தத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி கண்டன உரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி. உதயகுமார், கடம்பூர் ராஜூ, மாவட்ட செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, மேலூர் பெரியபுள்ளான் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. சரவணன், வில்லாபுரம் ஜெ. ராஜா, ராஜ்சத்யன், எம்.எஸ். பாண்டியன், வக்கீல் ரமேஷ் ஆகியோர் உள்ளனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியை கீழே காணலாம்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நீர்வளத்துறை சார்பில் பள்ளிக்கரணை தாமரைக்குளம் அருகில், பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து வெளியேறும் வெள்ள நீரினை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு கொண்டு செல்ல ஏதுவாக ரூ.57.70 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து சதுப்பு நிலம் வரையில் மூடிய பெரு வடிகால்வாய் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது அமைச்சர்கள் கே.என்.நேரு, க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரை கண்டன பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அருகில் எம்.எல்.ஏக்கள் விவி.ராஜன்செல்லப்பா, பெரியபுள்ளான் மற்றும் எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார் பைக்காரா கருப்பசாமி, முத்துவேல் ஆகியோர் உள்ளனர்.



முன்னாள் மேயர் சிவராஜின் 131-வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில் சென்னை தங்கசாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருப்படத்திற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.




வீட்டு வரி, சொத்துவரி, மின் கட்டண உயர்வு ஆகியவற்றை கண்டித்து சிவகாசி அருகே திருத்தங்கல் அண்ணாமலையார் நகர் அம்மா திடலில் நேற்று நடந்த கண்டன பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு வெள்ளி செங்கோல் விருதுநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பாக முன்னாள் அமைச்சர் கே.டி. ராஜேந்திரபாலாஜி வழங்கினார்.

# அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை நிறுத்துவது தான் திராவிட மாடலா?

## சிவகாசி கண்டன கூட்டத்தில் இ.பி.எஸ். கேள்வி

சிவகாசி, செப். 30-

அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை நிறுத்துவதுதான் திராவிட மாடலா? என்று சிவகாசி கண்டன கூட்டத்தில் இ.பி.எஸ். கேள்வி எழுப்பியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அ.தி.மு.க. சார்பில் கண்டன பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி தலைமை தாங்கினார். அ.தி.மு.க. பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் முதல்வர் அ.தி.மு.க. இடைக்காலப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு வெள்ளி செங்கோல் விருதுநகர் மேற்கு மாவட்ட கழகம் சார்பாக முன்னாள் அமைச்சரும் விருதுநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான கே.டி. ராஜேந்திரபாலாஜி வழங்கினார். முன்னதாக எடப்பாடி பழனிச்சாமிக்கு திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் சார்பாக மரியாதை வழங்கப்பட்டது.

பிறகு கண்டன பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:-

தமிழகத்தில் 32 ஆண்டுகள் ஆட்சி செய்த ஒரே இயக்கம் அ.தி.மு.க. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். தொடங்கி, புரட்சிதலைவி அம்மா சிறப்பான ஆட்சியை தந்தார். அம்மா மறைவிற்கு பிறகு நான் முதல்வராகி சிறப்பான ஆட்சி தந்தேன். அந்த வகையில் அதிக நாட்கள் ஆட்சி செய்த இயக்கம் அ.தி.மு.க.. அ.தி.மு.க. ஆட்சியில் தான் தமிழகம் ஏற்றம் பெற்றது. முதன்மை மாநிலமாக தமிழகம் மாறியதற்கு அடித்தளமிட்டது அ.தி.மு.க. அரசு தான். இன்றைக்கு மு.க.ஸ்டாலின் திராவிட மாடல், திராவிட மாடல் என்று மூச்சுக்கு 300 தடவை சொல்கிறார். அப்படி என்ன திராவிட மாடல் கொண்டு வந்து விட்டார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்து 16 மாதமாகிறது. அப்படி என்ன செய்து விட்டார்கள்? தி.மு.க. ஆட்சியில் தமிழக மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் ஒரே நேரத்தில் 11 மருத்துவ கல்லூரிகளை கொண்டு வந்தோம். பிள்ளையார் சுழி போட்டது போல விருதுநகரில் முதல் மருத்துவ கல்லூரி அமைந்தது. அதன் ராசி அடுத்தடுத்து மருத்துவ கல்லூரி கொண்டு வரப்பட்டது.

அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜி விருதுநகரில் மருத்துவ கல்லூரி அமைய அடிக்கடி என்னை சந்தித்து வலியுறுத்தினார். அதன் பயனாக விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் பிரம்மாண்டமான மருத்துவ கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது. சென்னையில் தனியார் மருத்துவமனையில் கிடைக்கும் சிகிச்சை விருதுநகரில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு கிடைக்க வழி வகை செய்தது அ.தி.மு.க. அரசு. 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் பெற்ற பிள்ளைக்கு யாரோ பெயர் வைப்பது போல அ.தி.மு.க. ஆட்சியில் தி.மு.க. அரசு தொடங்கி வைத்து வருகிறது. 7 சட்டக்கல்லூரிகள், கால்நடை மருத்துவமனை, ஆராய்ச்சி நிலையங்கள் கொண்டு வந்தோம். 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கொண்டு வந்தோம். பள்ளிகளை தரம் உயர்த்தி அதிக மாணவ-மாணவிகளுக்கு கல்வி கற்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினோம்.

ஒரு நாடு கல்வியில் சிறந்து விளங்கினால் தான் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க முடியும். அதிலும் ஏழை மக்களுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்தி தந்த அரசு அம்மா அரசு. அதனால் தான் உயர் கல்வியில் நாட்டிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. இந்த சாதனைக்களுக்கெல்லாம் சொந்தம் கொண்டாட வேண்டியது அ.தி.மு.க. அரசு தான்.

மாணவர்களுக்கு சீருடை, பாடபுத்தகம், மடிக்கணினி உள்ளிட்ட கல்வி உபகரணங்களை தந்தது அ.தி.மு.க. அரசு. யாராலும் கொடுக்க முடியாததை மாணவர்களுக்கு கொடுத்தது அம்மா அரசு. ஆனால் தி.மு.க. அரசால் இந்த திட்டதை நிறுத்த தான் முடிந்தது. தமிழகத்தில் ரூ.52 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கி அவர்களது வீடுகளில் விளக்கேற்றியது அ.தி.மு.க. அரசு. அந்த திட்டத்தையும் தி.மு.க. அரசு தற்போது நிறுத்திவிட்டது. அதை நினைத்தால் வேதனையாக உள்ளது. மாணவ-மாணவிகளின் அறிவுபூர்வ கல்வியை பெருக்குவதற்காக தான் மடிக்கணினி திட்டம் தொடங்கப்பட்டது. அந்த திட்டத்தை நிறுத்துவது தான் திராவிட மாடலா? என்பதை மு.க.ஸ்டாலின் எண்ணி பார்க்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடுகையில் கடந்த ஒன்றரை ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் மளிகை பொருட்களின் விலை 30 சதவீதம் உயர்ந்துள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பல்வேறு வாக்குறுதிககளை அளித்தனர். ஆனால் அவர்கள் அதனை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றிவிட்டனர்.

பெட்ரோல், டீசல் விலையை குறைப்போம் என்றார்கள். ஆனால் டீசல் விலையை குறைக்கவில்லை. டீசல் விலை உயர்ந்தால் அனைத்து பொருட்ளின் விலையும் உயர்ந்துவிடும். இதுபோல் அவர்கள் அறிவித்த எந்த அறிவிப்பையும் நிறைவேற்றவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் படித்த இளைஞர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வாங்கிய கல்விக்கடனை ரத்து செய்வோம் என்றனர். ஆனால் அதனை செய்யவில்லை. கிராமப்புறங்களில் 100 நாள் வேலை திட்ட பணி நாட்களை 150 ஆக உயர்த்துவோம் என்றனர்.

மேலும் 100 நாள் வேலை திட்ட தொழிலாளர்கள் ஊதியத்தை உயர்த்துவோம் என்றனர். ஆனால் எதையும் செய்யாமல் ஏழைகளை தி.மு.க. அரசு ஏமாற்றி விட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவித்ததும் மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தப்பட்டது அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சியில் அவ்வாறு நடக்கவில்லை.

தற்போது மத்திய அரசு ஊழியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கொடுக்க வேண்டிய அகவிலைப்படி உயர்வை அரசு ஊழியர்களுக்கு வழங்காத தி.மு.க. அரசு இந்த அகவிலைப்படி உயர்வை எப்படி வழங்கப்போகிறார்கள் என்று பார்க்கலாம். படித்தவர்கள், படிக்காதவர்களை ஏமாற்றிய ஒரே அரசு தி.மு.க. அரசு. அதில் கைதேர்ந்தவர் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

# கருக்கலைப்பு செய்வதற்கு திருமணம் ஆகாத பெண்களுக்கும் உரிமை உண்டு

## சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு

புதுடெல்லி, செப். 30-

கருக்கலைப்பு செய்யும் உரிமை திருமணமான பெண்களுக்கு மட்டுமே உள்ளது என சுருக்குவது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட் திருமணமாகாத பெண்களும் கருக்கலைப்பு செய்ய உரிமை உண்டு என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருமணம் ஆகாத பெண்கள் கருக்கலைப்புக்கு அனுமதி கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி கருக்கலைப்பு செய்ய அனைத்து பெண்களும் தகுதியானவர்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு., சில சமயங்களில் பெண்கள் வலுக்கட்டாயமாக உடலுறவுக்கு ஆளாக்கப்பட்டு கர்ப்பம் தரிக்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்களை அதில் இருந்து காப்பாற்ற சட்டம் அனுமதிக்கிறது. பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்களை போலவே திருமணமாகி வலுக்கட்டாயமாக கர்ப்பம் தரிக்கப்பட்ட பெண்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் கருக்கலைப்பு செய்ய சட்டபூர்வ உரிமை உண்டு.

கருக்கலைப்புக்கான உரிமை என்பது திருமணத்தின் மூலம் மட்டுமே கிடைக்கும் என்ற நிலையை மாற்றுவது அவசியம். பாதுகாப்பாற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்வது மட்டுமே தடுக்கப்பட வேண்டும். திருமணம் ஆகாத பெண்களும் சட்டப்படி பாதுகாப்பான முறையில் கருக்கலைப்பு செய்து கொள்ள உரிமை உண்டு.

கருக்கலைப்பு சட்டத்தின்படி திருமணமான பெண்கள், கணவரை இழந்த பெண்கள் தங்களது 24 வார கால கருவை கலைக்க உரிமை உண்டு. தேவையற்ற கர்ப்பத்தை கலைக்கும் உரிமை திருமணமான பெண்களுக்கு மட்டுமே உள்ளது என சுருக்குவது அரசியல் சாசனத்திற்கு எதிரானது. இவ்வாறு நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார்.

# கார்களில் ஆறு ஏர்பேக்குகள்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

இதனை கருத்தில் கொண்டு, 2023-ம் ஆண்டு அக்டோபர் முதல், 'எம்-1 ரக பயணிகள் கார்களில் குறைந்தது ஆறு ஏர்பேக்குகள் பொருத்தப்பட்டிருப்பது கட்டாயம்' என்று எடுக்கப்பட்ட முன்மொழிவை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். இந்த கட்டாய விதி உறுதியாக நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் இந்தியாவில் சிறிய என்ட்ரி லெவல் சிறிய காரின் விலையில் 10 சதவீதம் வரை உயர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.